நாடு முழுவதும் உங்களை நாடி
புத்தம் புதிய பொலிவுடன்
ஆதவன் HD
UHF

விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 53 குரோதி வருடம் மார்கழி மாதம்
08 ஆம் திகதி திங்கட்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 21 (23.12.2024)


பிரதியமைச்சர் அருண்

# ரோஹிங்கிய அகதிகளை ஏற்றுக் கொண்டுள்ளோம்

● அடிப்படை வசதிகளுடன் தங்குமிடம்;
● மிரிஹான முகாமிற்கு மாற்றத் திட்டம்

▮ எஸ்.கீதபொன்கலன், அப்துல் சலாம் யாசின்

மியன்மார் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாமான திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு சென்ற வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ர அகதிகளை சந்தித்த பின்னர் இவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக் கைகள் குறித்து விளக்கமளித்தார்.

"சட்ட விரோதமாக நாட்டிற்குள் வந்த இவர்களை 02 →







## ஒத்தி வைக்கப்பட்ட உயர்தர பரீட்சைகள் ஆரம்பம்

▮ முகம்மட் முக்தார்

வெள்ளம், புயல், மண்சரிவு காரணமாக கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் ஒருவாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட க.பொ.த. உயர்தர பரீட்சைகள் மீண்டும் நேற்று முன்தினம்(21) ஆரம்பமாகியது.

மேற்படி தினங்களில் ஒத்திவைக் கப்பட்ட பரீட்சை நாட்களுக்கான பாடங்கள் இம்மாதம் 31 ஆம் திகதி வரை நடைபெறுமென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சை நவம்பர் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 20 ஆம் திகதிவரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கையில் திடீரென ஏற்பட்ட அசாதாரண காலநிலை காரணமாக நவம்பர் 27 முதல் ஒரு வாரகாலத்திற்கு பரீட்சைகள் 02 →

## இறக்குமதி செய்யப்படும் அரிசி 10 நாட்களுக்கே போதுமானது



▮ கனுஷியா புஷ்பகுமார்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசித் தொகை 10 நாட்களுக்கு மாத்திரமே போதுமானதாக உள்ளதாக அரிசி இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மேலும் அரிசி இறக்குமதி செய்யப்படவில்லையெனின் அரிசித் தட்டுப்பாடு 02 →

## தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக யாரையும் நியமிக்கவில்லை: வலுவடையும் உட்கட்சி மோதல்




தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக யாரும் நியமனம் செய்யப்படவில்லை என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழு பேச்சாளருமான ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் சனிக்கிழமையன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் 02 →

## இருவார கால அரிசி இறக்குமதியால் அரசுக்கு ரூ.430 கோடி வரி வருமானம்



அரிசி இறக்குமதியால் இலங்கை சுங்கத்துறை இறக்குமதி வரியாக 430 கோடி ரூபாய் கிடைத்துள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களத்தின் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை(20)நள்ளிரவு வரை அரிசி இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கி யிருந்த நிலையில், தனியார் இறக்குமதியாளர்கள் 67,000 மெற்றிக் தொன் அரிசியை நாட்டிற்குக் கொண்டு வந்துள்ளதாக சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

67,000 மெற்றிக்தொன் அரிசியில் 28,500 மெற்றிக்தொன் பச்சை அரிசியும் 38,500 மெற்றிக்தொன் நாட்டரிசியும் உள்ளடங்குவதாகவும் அந்த அரிசிக்கு ஒவ்வொரு கிலோவிற்கும் 65 02 →

## மட்டக்களப்பு விபத்துகளில் இருவர் உயிரிழப்பு: மூவர் கைது



▮ கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் வீதியைக் கடக்க முயன்றவர் மீது கனரக வாகனம் மோதி ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொரு சம்பவத்தில் கனரக வாகனத்தில் மோட்டார் சைக்கிள் மோதி 20 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். சனிக்கிழமை (21) இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடைய கனரக வாகன உரிமையாளர் 02 →

## மூவரைப் பலிகொண்ட ஹற்றன் பஸ் விபத்து: 7 பேர் கண்டிக்கு மாற்றம்



▮ க. கிஷாந்தன்

ஹற்றனில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று ஹற்றன் மல்லியப்பு பகுதியில் சனிக்கிழமை(21) வீதியை விட்டு விலகி 02 →

## நாடளாவிய ரீதியில் பஸ்களில் விசேட சோதனை

▮ கனுஷியா புஷ்பகுமார்

நாடளாவிய ரீதியில் பயணிகள் போக்குவரத்து பஸ்களில் விசேட சோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமையினால் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இந்த சோதனை நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக, பயணிகள் போக்குவரத்து பஸ்கள் அதிகளவில் 02 →

## அகதிகளை பார்வையிட்டார் ரிஷாட்: உதவிப் பொருட்களும் கையளிப்பு



மியன்மாரிலிருந்து படகில் புறப்பட்டு கடந்த வாரம் முள்ளிவாய்க்காலில் கரையொதுங்கி திருகோணமலை ஜமாலியா பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள ரோஹிங்கிய அகதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன் மற்றும் அஷ்ரப் தாஹிர் ஆகியோர் சனிக்கிழமை (21) நேரில் சென்று பார்வையிட்டனர்.

ரோஹிங்கிய அகதிகளை சந்தித்து, அவர்களின் குறைநிறைகளைக் 02 →

## தொழில்நுட்ப கற்கைகளுக்கான கல்வியியற் கல்லூரி குளியாப்பிட்டியில்

▮ முகம்மட் முக்தார்-

கொரிய குடியரசின் அனுசரணையில் குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப கற்கைகளுக்கான தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்விமானிப் பாடநெறிக்கென தனியான கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

க.பொ.த உயர்தர பரீட்சையில் உயிரியல் தொழில்நுட்ப முறைமை மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் 02 →

## மேல் மாகாணத்தில் மேலதிக வகுப்புகளுக்குத் தடை

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் தமது சொந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கட்டணத்துடன் கூடிய மேலதிக கல்வி வகுப்புகளை நடத்துவதற்கு தடைவிதித்து சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பாடசாலை நேரம், பாடசாலை நேரத்திற்குப் பின்னர் வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களிலும் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. 02 →

## கொழும்பு - தெல்தெனிய பஸ் மரத்தில் மோதி கோர விபத்து





▮ எம்.ஏ.அமீனுல்லா

கொழும்பில் இருந்து கண்டி ஊடாக தெல்தெனிய நோக்கி பயணித்த இ.போ. சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று நேற்று முன்தினம் (21) பிற்பகல் கடுகன்னாவ டாசன் கோபுரத்திற்கு அருகில் பெரிய மாமரமொன்றில் மோதியதில் 09 பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த 09 பேர் கடுகன்னாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை யடுத்து, 07 பேர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி தேசிய 02 →

# நெல்லுக்கு அதிக விலை: அரிசியை கட்டுப்பாட்டு விலையில் விற்க முடியாது

கனூஷியா புஷ்பகுமார்

ஒரு கிலோ நெல்லுக்கு 150 ரூபாய் வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தாலும், இந்த தொகைக்கு நெல்லை பெற்று, தற்போதைய கட்டுப்பாட்டு விலையில் அரிசியை வழங்க முடியாது என, சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு கிலோ நெல்லின் விலை பல பிரதேசங்களில் 145 ரூபாவாக அதிகரித்துள்ளதால் ஒரு கிலோ அரிசியின் கட்டுப்பாட்டு விலை 270-275 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

150 ரூபாய்க்கு நெல்லை வாங்கினால், ஒரு கிலோ அரிசியின் விலையை 280 ரூபாயாக அதிகரிக்க வேண்டும் என்றும், ஒரு கிலோ 150 ரூபாய் கிடைக்காததால், பல பகுதிகளில்

உள்ள விவசாயிகள் நெல்லை வழங்க மறுப்பதாகவும் என்றும் ஆலை உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

இதன்காரணமாக எதிர்வரும் ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்திற்குள், தற்போதைய அரிசி தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் என்பதுடன், அரிசி இறக்குமதி திட்டங்களின்படி, கடந்த சில நாட்களாக எதிர்பார்த்த அளவு அரிசி கையிருப்பு வரவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாளாந்தம் 60 இலட்சம் முதல் 65 இலட்சம் கிலோ வரையிலான அரிசி தேவைப்படுகிறது. இந்த அரிசி இருப்புகளில் 50 வீதம் சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்களாலும், மீதமுள்ளவை வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யும் பெரிய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களாலும் வழங்கப்படுகின்ற நிலையில் நெல் கையிருப்பு இல்லாத காரணத்தினால் தற்போது சுமார் 300 சிறு மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் தினமும் சந்தைக்கு வெளியிடும் அரிசியின் அளவு குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




"பீஸ் ஆர்க்" என்ற சீனக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் துறைமுகத்தை வந்தடைந்த இக்கப்பல் உலகின் அதிநவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்ட இராணுவ மருத்துவமனைக் கப்பல் என கருதப்படுகிறது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### ரோஹிங்கிய...

மனிதாபிமான அடிப்படையில் ஏற்றுக்கொண்டுள்ளோம். அவர்களுக்கு தேவையான அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன" என பிரதியமைச்சர் அருண் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

சனிக்கிழமையன்று(21) அவர்கள் கொழும்பிற்கு அழைத்துச்செல்லப்பட இருந்தமையால்,நீண்ட நாள் அடிப்படையில் திருகோணமலையில் ஏற்பாடுகளை செய்திருக்கவில்லை. ஆனால் உணவு, இருப்பிடம்,சுகாதாரம் போன்ற அத்தியாவசிய விடயங்கள் சிறப்பாக அணுகப்பட்டு வருகின்றன. 20ஆம் திகதி பல்வகை கொண்ட நடமாடும் மருத்துவ முகாம் உடனடியாக அஷ்ரப் துறைமுகத்தில் வைத்து நடத்தப்பட்டது.

சட்ட நடவடிக்கைகளின் பின்னர் இவர்களை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டது.குடிவரவு,குடியகல்வு திணைக்களத்தினர் சில நாள் அவகாசம் கேட்டுள்ளார்கள். சட்ட, விசாரணை, இடவசதி தொடர்பான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ஓரிரு நாட்களில் இவர்கள் மிரிஹான முகாமிற்கு மாற்றப்படுவர். மேலும் பாதுகாப்புத் தரப்பும், புலனாய்வுப் பிரிவினரும் விசாரணை மேற்கொள்கின்றனர்.

"அவர்களது உணவு முறை தொடர்பாக நான் நேரடியாகவே கேள்விகள் பலவற்றை கேட்டேன். எமது உணவு நடைமுறை அவர்களுக்கு பொருத்தமானது என்று அறிந்து கொண்டேன்".எனது பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி மியன்மார் மக்களுடன் உரையாடல்களை மேற்கொள்ளக்கூடிய, அவர்களின் மொழி தெரிந்தவர் என்ற காரணத்தால் மொழிச் சிக்கல் இருக்கவில்லை.

தற்போது பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இவர்கள் இருப்பதனால் எமது நேரடித் தலையீட்டையும் மட்டுப்படுத்தியுள்ளோம்.பல திணைக்களங்களின் ஒருங்கிணைப்பால் தற்போது இங்குள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதே வேளை, தன்னார்வ தொண்டு நிறுவனங்களும்,தனிப்பட்ட நபர்களும் சுயாதீனமாக வந்துஉதவுகின்றனர்.நேற்றுமுன்தினம் (21) முழுநாளும் தேசிய மக்கள் சக்தியின் இரண்டு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயங்கள் தொடர்பாக களத்தில் நின்று செயற்பட்டனர்.

எம்மைப் பொறுத்த வரையில், இருக்கும் வளங்களைக் கொண்டு, பல்வேறு அமைச்சுகளை ஒருங்கிணைத்து இந்த விடயம் சிறப்பாக அணுகப்பட்டு வருகின்றது. இதில் குறைபாடுகள் ஏதும் இருப்பின் அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதில் ஐயம் இல்லை"என்று குறிப்பிட்டார்

### இறக்குமதி செய்யப்படு..

அதிகரிக்கும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டில் நிலவும் அரிசி தட்டுப்பாடு காரணமாக இந்தியாவிலிருந்து 70,000 மெட்ரிக் டொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்நிலையில், அரிசியை இறக்குமதி செய்வதற்கான கால அவகாசத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை அரசாங்கம் நீடித்துள்ளது.

மேலும், இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படும் அரிசி கையிருப்பு சுமார் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மெட்றிக் டொன் ஆகும்.

### தமிழரசுக்கட்சியின் பேச்சாளராக்...

என்ற பணி நாடாளுமன்றக் குழுவினால் தானாகத் தரப்பட்ட ஒன்று. கடந்த வவுனியா கூட்டத்தின் போது ஊடகங்கள் என்னையும் சந்தித்தார்கள். முன்னாள் எம்.பி அவர்களையும் சந்தித்தார்கள். இதன்போதும் நான் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தியிருந்தேன்.

ஆனால் அந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது உண்மை. பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பலர் வெளியேறியதன் பின்னர் அது முற்றுப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தற்போது என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை நான் செய்கின்றேன். அது பற்றியே என்னால் கூற முடியும், மற்றைய விடயத்தை எமது மத்திய குழுவும் பாராளுமன்றக் குழுவுமே அது பற்றிய முடிவை எடுக்க வேண்டும்.

கட்சிக்குள் வழக்குத் தாக்கல் என்ற விடயம் நடந்துகொண்டு தான் இருக்கின்றது. கடந்த பொதுச்சபையில் தலைவர் தெரிவின் போதும் ஒரு வழக்குத் தாக்கல் இடம்பெற்றது. அது நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்பட்டுள்ள விடயம். ஆதலால் அது தொடர்பில் கருத்துச் சொல்ல முடியாது.

அந்த வழக்குத் தாக்கலைத் தொடர்ந்து அதன் பின்னர் எடுக்கப்படுகின்ற முடிவுகளிலே முரண்பாடுகள் வருகின்ற போது அதனை முன்மாதிரியாகக் கொண்டு சிலரும் தமது பக்க நியாயத்தை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கை காணப்படுகின்றது.

இந்த விடயங்களைப் பொருத்த மட்டில் வழக்குத் தாக்கல் செய்வது என்பதை விட கட்சி மட்டத்திலேயே பேசி தீர்வு காண்பது உகந்ததாக இருக்கும். ஒரு சாரார் வழக்கை நாடும் போது மற்றைய சாராரும் தங்கள் மீது விரல் நீட்டப்படுவதைத் தடுக்கும் முகமாக சட்டத்தை நாட வேண்டி வருகின்றது. சிலர் விட்டுக் கொடுக்கவும் மாட்டார்கள். இதனால் தான் தற்போதைய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

கடந்த தேர்தலில் ஏற்பட்ட குறைபாடுகள், வேட்பாளர் தெரிவுக்குழு செய்த குறைபாடுகள் காரணமாக வடமாகாணத்தில் எமக்குப் பாரிய பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது.வடமாகாணத்தில் கிடைக்க வேண்டிய ஐந்து ,ஆறு ஆசனங்கள் எமக்குக் கிடைக்காமல் போய்விட்டன. இதற்கான காரணம் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாறி மாறி குற்றங்களை முன் வைக்காமல் சுயாதீனக் குழுவொன்றை அமைத்து வட மாகாணத்தில் ஆசனங்கள் குறைந்தமைக்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். மாறாக என்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இன்னுமொருவர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பது அறிவுபூர்வமானதாகவும், நியாயமானதாகவும் இருக்காது.

வரலாற்றில் முதன்முறையாக ஒரு சிங்கள தேசியக் கட்சியான தேசிய மக்கள் சக்தி தமிழரசுக் கட்சியைப் பின்தள்ளி முதலிடத்தைப் பெற்றுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சங்குச் சின்னத்திற்கு மக்கள் அதிகளவிலான வாக்குகளை வழங்கியிருந்தார்கள். ஆனால் தற்போது தமிழரசுக் கட்சி பெற்றுள்ள வாக்குடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவு வாக்கு இழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இதில் எங்கு பிழை நடந்திருக்கின்றது, எமது தீர்மானங்களில் ஏதும் தவறுள்ளதா என்பது குறித்தி சர்சைக்குரியவர்கள் நியாயங்களைச் சொல்லாமல் சுயாதீனக் குழு மூலம் இதற்கான விடயங்களைக் கண்டு அவர்களே அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று தெரிவித்தார்.

### கொழும்பு - தெல்தெனிய பஸ்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் பஸ்ஸின் சாரதியும் சோள விற்பனையாளர் ஒருவரும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பஸ்ஸின் முன்பக்கத்தின் இடது பகுதி மரத்தில் மோதியதில், நடைபாதையில் இருந்த இருவர் பஸ்ஸுக்கும் மரத்திற்கும் இடையில் சிக்கிக் கொண்டனர் அதன் பின்னர் பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து கிரேன் மூலம் அவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

பஸ்ஸில் இருந்து இறங்குவதற்காக வந்த சோள வியாபாரியும் மற்றுமொருவருமே இவ்வாறு சிக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பஸ்ஸின் முன்பக்க இடது டயரின் காற்றழுத்தம் காரணமாகவே பஸ் கட்டுப்பாட்டை மீறி மரத்தில் மோதியதாக அறியவரும் அதேவேளை, மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரி ஒருவர் பரிசோதித்து அறிக்கை வழங்கியதன் பின்னரே சம்பவம் குறித்த உண்மைத்தன்மையை புரிந்துகொள்ள முடியும் என கடுகன்னாவ பொலிஸ் போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

### ஒத்தி வைக்கப்பட்ட....

இடைநிறுத்தப்பட்டன.

இம்மாதம் 31ம் திகதி பரீட்சைகள் முடிவடைந்தவுடன் 2025 ஜனவரி 02ம் திகதி மீண்டும் சகல பாடசாலைகளும் 2024 ம் ஆண்டின் மூன்றாம் தவணையின் இறுதிக்கட்ட கல்வி நடவடிக்கைக்காக திறக்கப்படவுள்ளன.

இதேவேளை தற்போது பரீட்சை ஆணையாளர் நாயகமாக உள்ள அமித் ஜயசுந்தர இம்மாதம் 31 ம் திகதியுடன் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்வதும் குறிப்பிடத்தக்கது.

### அகதிகளை பார்வையிட்டார்

கேட்டறிந்துகொண்ட ரிஷாட் எம்பி, அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழங்கிவைத்தார்.

அரசாங்கத்தின் ஊடாக அவர்களுக்கு முன்னெடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றி கேட்டறிந்துகொண்ட எம்.பி, ரிஷாட் பதியுதீன், ஐ.நா சபையின் ஊடாக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இவ் விஜயத்தின் போது, திருகோணமலை மாவட்ட மக்கள் காங்கிரஸ் முக்கியஸ்தர்களான வைத்தியர் ஹில்மி முகைடீன் மற்றும் வைத்தியர் ஹில்மி மஹ்ஷூருப் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களும் உடனிருந்தனர்.

### நாடளாவிய ரீதியில்...

விபத்துக்குள்ளாகி வரும் காரணத்தினால் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் சிறப்பு சோதனை தொடங்கப்பட்டது.

போதைப்பொருள் பயன்படுத்தி விட்டு பேருந்துகளை செலுத்தும் சாரதிகள் தொடர்பிலும் பொலிஸாருக்கு தகவல் கிடைக்கபட்டுள்ளது.

பேருந்து சாரதிகள் போதையில் வாகனம் செலுத்துவது தொடர்பில் தகவல் கிடைத்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### மேல் மாகாணத்தில்...

மேல்மாகாண கல்விச் செயலாளர் கே.ஏ.டி.ஆர்.நிஷாந்தி ஜயசிங்க கையொப்பமிட்ட சுற்றறிக்கை கல்விப் பணிப்பாளர், பிராந்திய பணிப்பாளர்கள், பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விதிமுறைகளை அனைத்து ஆசிரியர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்றும், அதற்கு எதிராக செயற்படுபவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை ஆரம்பத்தில் சப்ரகமுவ மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டது.

### மட்டக்களப்பில் விபத்துகளில்..

மற்றும் சாரதி இருவர் என 3 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு திருகோணமலை வீதியிலுள்ள வெள்ளக்குட்டி சந்தி பகுதியில் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நகரத்தை நோக்கிச் சென்ற கனரக வாகனம், வீதியை கடக்க முயன்ற ஒருவர் மீது மோதி விபத்துக்குள்ளானதில் மட்டு. நாவற்கேணியைச் சேர்ந்த 46 வயதுடைய சி.சிவனேஸ்வரன் என்பவர் ஸ்தலத்திலே உயிரிழந்தார். பொலிஸார் கனரக வாகன சாரதியைக் கைதுசெய்தனர்.

மாமாங்கம் கோவில் வீதியில் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீதியை செப்பனிடப் பயன்படுத்தும் (றோலர்) கனரக வாகனத்துடன் மோதியதையடுத்து படுகாயமடைந்த அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது உயிரிழந்தார்.மாமாங்கம் பாடசாலை வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய ரஞ்சித் சவிஷ்தன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து வீதியில் கனரக வாகனத்தை நிறுத்திவைத்திருந்த வாகன உரிமையாளர் மற்றும் சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டதுடன் பொலிஸார் வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

### தொழில்நுட்ப கற்கைகளுக்கான..

மற்றும் தகவல் தொழிநுட்ப பாடத்துறைகளில் சித்தியடைந்தவர்களை தொழில்நுட்பக் கல்வி கற்பித்தலில் விசேட கல்விமானி பட்டங்களை வழங்குவதற்காக இக் கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நான்கு கற்றல் கால வருட முடிவில் தொழிநுட்ப கல்விமானி பட்டச் சான்றிதழுடன் நேரடியாக தொழில்நுட்ப கல்விமானி பட்டதாரி ஆசிரியர் நியமனம் கல்வியமைச்சால் வழங்கப்படும்.

நாடாளாவிய ரீதியில் உள்ள கல்விக்கல்லூரிகளால் வழங்கப்படும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டங்களுக்கு பதிலாக கல்விமானி பட்டங்களை வழங்குதல் என்ற கொள்கைக்கு அமைவாக தொழில்நுட்ப கல்விமானி பட்டம் வழங்குவதற்கு பயிலுனர்கள் முதன்முறையாக நேரடியாக இல்கல்லூரியில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இது தவிர, தொழிநுட்பம் சார்ந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிகளும் இக்கல்வியியற் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மூவரைப் பலிகொண்ட...

விபத்துக்குள்ளானதில் அதில் பயணஞ் செய்தவர்களில் உயிரிழந்த மூவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் படுகாயமடைந்த 7 பேர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த விபத்தில் கண்டி பகுதியைச் சேர்ந்த அப்துல் உவைஸ் (68), ஹற்றன் தோட்டப்பகுதியைச் சேர்ந்த தேவராஜ் தினேஷ்குமார் (14), நோர்வூட் மேற்பிரிவு பகுதியைச் சேர்ந்த முத்துராக்கு (67) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

பஸ்ஸில் பயணித்த 53 பேர் காயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவர்களில் மூவர் உயிரிழந்ததாகவும், ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் மேலும் காயமடைந்த 43 பேர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் டிக்கோயா ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விபத்தில் படுகாயமடைந்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பஸ்ஸின் சாரதி அட்டன் பொலிஸாரின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அட்டன் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

பஸ் சாரதி தனது கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டே பஸ்ஸை ஓட்டிச் சென்றதாகவும், அதனாலேயே பஸ் சாரதிக்கு பஸ்ஸின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் அனுமதிக்கப்பட்ட ஆசனங்களை விட சில ஆசனங்கள் பொருத்தப்பட்டிருந்ததாக ஹற்றன் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டதுடன், விபத்துக்குள்ளான பஸ்ஸின் பாதுகாப்பு கமராவின் காட்சிகளை பொலிஸார் ஆராய்ந்துள்ளனர்.

குறித்த தரவுகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், விபத்துக்குள்ளான பஸ் (21) இரவு ஹட்டன் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

விபத்தில் உயிரிழந்த 14 வயதுடைய சிறுவன் சிறுநீரக நோயாளர் என்பதுடன், மாதாந்த சிகிச்சை பெறுவதற்காக தனது சகோதரியுடன் கண்டிக்கு சென்றிருந்த போதே இவ்விபத்துக்குள்ளாகியுள்ளார்.

விபத்தில் உயிரிழந்த சிறுவனின் சகோதரியும் காயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஹற்றன் பொலிஸ் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் மற்றும் மத்திய மாகாண வீதி போக்குவரத்து அதிகாரசபை அதிகாரிகள் இணைந்து வீதி விபத்துக்களை குறைக்கும் நோக்கில் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கான செயலமர்வு அண்மையில் ஹற்றன் பிரதேசத்தில் நடாத்தப்பட்டது.

ஹற்றன் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகரவின் மேற்பார்வையில் ஹற்றன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன தலைமையில் ஹற்றன் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### இருவார கால அரிசி...

ஷரூபா இறக்குமதி வரி அறவிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த அரிசித் தொகை இறக்குமதி மூலம் நாட்டுக்கு 430 கோடி ஷரூபாய் வரி வருமானம் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# கிராமிய பொருளாதார அபிவிருத்தியே அரசாங்கத்தின் பிரதான இலக்கு

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி



நாட்டுக்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரம் கிடைத்தாலும் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் இதுவரையில் தீர்க்கப்படவில்லை என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதான அலுவலகத்தை நேற்று(22) திறந்து வைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, அடுத்த வருடம் முதல் கிராமங்களை அபிவிருத்தி செய்வது தற்போதைய அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என தெரிவித்த அமைச்சர் சுனில் ஹெந்துநெத்தி வீழ்ச்சியடைந்த பொருளாதார முறைமைக்கு எதிராக புதியதொரு பொருளாதார கொள்கையை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக மக்களின் கருத்துகளை அறியும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹெந்துநெத்தி பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் வகையில் இந்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது.இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர்,

நாங்கள் அனைவரும் கடந்த காலத்தில் பொருளாதார வீழ்ச்சியை எதிர்நோக்கினோம். எங்களுக்கு கிடைக்கப்பெற்றது பொருளாதார வீழ்ச்சி அடைந்த நாடு. மக்களின் அயராத உழைப்பும் அயராத தியாகத்தின் காரணமாக தற்போது பொருளாதாரத்தில் நாங்கள் அபிவிருத்தியை நோக்கி செல்லக்கூடிய விதத்தில் இருக்கின்றோம்.

பிச் ரேட்டிங் நிறுவனம் , இந்த நாடு அபிவிருத்தி ரீதியாக முன்னோக்கிச் செல்லுகின்ற நாடு என்கின்ற வகையில் எங்களை அங்கீகரித்திருக்கின்றது. சர்வதேச ரீதியாக எந்த அங்கீகாரம் கிடைத்தாலும் மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என நாங்கள் நினைக்கின்றோம்.

ஆகவே 2025 ஆம் ஆண்டு கிராமிய மட்ட கிராமிய பொருளாதாரங்களை வளர்ச்சியடையச் செய்வது எமது பிரதான வேலைத்திட்டமாக காணப்படுகின்றது. கடந்த அரசாங்கத்தால் கிராமிய மட்டத்தில் ஒதுக்கீடுகளை செய்த போதும் கிராமிய மட்டத்தில் இருக்கின்ற மக்களின் பிரச்சினைகள் தீர்வதாக இல்லை. இந்த ஒதுக்கீடு அவர்களுக்கு போய் சேராததே இதற்குக் காரணமாக இருக்கின்றது. இதனால் மக்களின் ஏழ்மை, வேலையில்லா பிரச்சினை, மக்களின் வாழ்வாதார நெருக்கடிகள் என்பன அதிகரித்து காணப்படுகின்றன.

பொருளாதார வீழ்ச்சி காரணமாக இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள் ஆகவே அந்த பிரச்சினைகள் இன்னமும் தீர்ந்ததாக எங்களுக்கு தெரியவில்லை. எனவே வீழ்ச்சி அடைந்த பொருளாதார முறைமைக்கு எதிராக புதியதொரு பொருளாதார கொள்கையை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளோம். அதில் முக்கிய காரணமாக இருப்பது மக்களின் கருத்துக்கள் ஆகும். இந்த பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கு மக்கள் பிரதிநிதிகளுக்கான அலுவலகங்கள் தேவைப்படுகின்றது. மக்களுக்கு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இவ்வாறான காரியங்கள் திறக்கப்படுகின்றன. தேர்தல் காலங்களில் வருகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் என்பதற்கு பதிலாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிழமையும் இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம்.

ஒரு சாராரின் பிரச்சினைகளை மாத்திரம் அன்றி அனைத்து மக்களின் பிரச்சினைகளையும் கேட்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம்.

தொடர்ச்சியாக நாங்கள் 2025 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா வேலை திட்டம், டிஜிட்டல் மயமாக்கல் வேலை திட்டம், கிராமிய மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் என்ற வேலை திட்டங்கள் போன்றவற்றை தொடர்ச்சியாக செய்வோம். ஒவ்வொரு வேலை திட்டங்களிலும் எங்களோடு இணைந்து கொள்ளும்படி அனைவரையும் அழைப்பு விடுக்கின்றோம் என தெரிவித்தார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்** இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நல்ல பலன் பெற பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**ரிஷபம்** இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. பிறருடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும்.

**மிதுனம்** உங்கள் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் இன்று தடைகள் நிறைந்து காணப்படும்.

**கடகம்** இன்று உற்சாகமாக காணப்படுவீர்கள். நண்பர்கள் மூலம் ஆதரவும் பலனும் பெறுவீர்கள்.

**சிம்மம்** இன்று மிதமான பலன்களே காணப்படும்.இன்று பொறுமையாக இருக்க வேண்டும்.

**கன்னி** இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும்.

**துலாம்** நீங்கள் அதிகப்படியாக செயலாற்றினால் வெற்றியைக் காண நேரலாம்.

**விருச்சிகம்** இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள்.

**தனுசு** இன்று சுமூகமான நாளாக இருக்கும். நல்ல முடிவு எடுக்க வைக்கும் உகந்த நாள்.

**மகரம்** இன்று இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்கவும்.

**கும்பம்** இன்று நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள்.

**மீனம்** இன்று பல நன்மைகள் நடக்கும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று மாலை 06:48 வரை அஷ்டமி பின்பு நவமி.
**நட்சத்திரம்:** இன்று காலை 11:17 வரை உத்திரம் பின்பு.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** திருவோணம்,அவிட்டம்.
**சூலம்:** கிழக்கு.
**இராகு காலம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.
**குளிகை:** 01:30 PM முதல் 03:30 PM வரை.
**எமகண்டம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.

# அனலைதீவையும் அபிவிருத்தி செய்வோம்

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் உறுதி



கிராமங்களை நோக்கியே அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருவதனால் அனலைதீவையும் அபிவிருத்தி செய்வோம் என அப்பகுதி மக்களுக்கு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உறுதியளித்துள்ளார்.

அனலைதீவுக்கு சனிக்கிழமை (21) கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் நேரில் விஜயம் செய்திருந்தனர்.

அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டபோது கடற்தொழிலாளர்கள், விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும், சமூக மட்டங்களில் நிலவும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் மக்களால் அமைச்சரிடம் எடுத்துக்கூறப்பட்டது. அனலைதீவு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தாம் அறிந்துவைத்துள்ளதாகவும், குறிப்பாக மின்சாரம், படகுப் போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பில் அறிந்துள்ளதாகவும், அவற்றை தீர்க்க பொறிமுறைகளை உருவாக்கவுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் எமது அரசாங்கம் கிராமங்களை நோக்கியே அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதனால், அனலைதீவிலும் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு அப்பகுதியை அபிவிருத்தி செய்வோம் என அப்பகுதி மக்களுக்கு அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

# பாபா மத்திய நிலையத்தில் ஒளிவிழா

கிறித்தோதயம் மற்றும் புத்தாண்டுப் பிறப்பை வரவேற்கும் ஒளி விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தில் பிரதம அறங்காவலர்





எஸ்.என். உதயநாயகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், ஜாயல பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் ஜெயப்பிரகாஷ் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். சாயி பாலவிகாஷ் மாணவர்களுக்கு கிறிஸ்மஸ் பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன.

# வாகரையிலிருந்து விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்யத் திட்டம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சகல இயற்கை வளங்களும் சூழ்ந்துள்ள மட்டக்களப்பு வாகரைப் பிரதேசம் பின் தங்கிய பகுதியாக அடையாளப்படுத்தப்படுகிறது. ஆனால் எதிர்காலத்தில் இந்த நிலைமையை தலைகீழாக மாற்றி அங்கிருந்து நஞ்சற்ற விவசாய உற்பத்திகளைச் செய்து அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவுக்கு திட்டங்களை வகுத்து மக்களுக்கு உதவி ஊக்கங்களை அளித்து வருகின்றோம் என விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நிறுவனத்தின் சமூக ஒருங்கிணைப்பாளர் பாலசிங்கம் முரளீதரன் தெரிவித்தார்.

வாகரைப் பிரதேசத்தில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நிறுவனத்தினால் அமுலாக்கம் செய்யப்படும் சமூக, பொருளாதார, கல்வி, சுகாதார, வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வாகரைப் பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழில் முனைவோர் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நிறுவனத்தின் நிருவாக அலுவலர் கே. நிர்மலா, சமூக ஒருங்கிணைப்பாளர் கே. லக்ஷ‌னா ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சமூக ஒருங்கிணைப்பாளர் முரளீதரன், வாகரையிலிருந்து ஏழ்மை நிலையை இல்லாமலாக்கும் தூரநோக்குத் திட்டத்தில் அங்கிருந்து அந்த வறிய மக்களாலேயே நஞ்சற்ற இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளச் செய்து அவற்றை மட்டக்களப்பின் நகர்ப்பகுதிக்கும் மேலும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நல்ல வருமானத்தை ஈட்டிக் கொண்டு அந்த ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் சமூக, பொருளாதார, கல்வி, சுகாதார அபிவிருத்திகளை அடைந்து கொள்ள முடியும்.

அதேவேளை மண்புழு உற்பத்தி செய்து அதன் மூலமும் சேதன விவசாயத்தை விரிவாக்கம் செய்ய ஏற்கெனவே பிரதேசத்திலுள்ள விவசாயப் பண்ணையாளர்களுக்கு பவயிற்சிகளும் உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன" என்றார்.

## சாய்ந்தமருதில் ஹோட்டல்களில்

# திடீர் கள சோதனை சுகாதாரத்துறை வேட்டை

(நூருல் ஹுதா உமர்)



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பிரிவுகளில் உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் திடீர் களப் பரிசோதனைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் அடங்கிய குழுவினர் மேற்கொண்ட இந்த திடீர் பரிசோதனையின் போது முறையற்ற வகையில் உணவு தயாரிக்கும் மூன்று நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதுடன் டெங்கு பரவும் வகையில் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருந்தவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த திடீர் களப் பரிசோதனையின் போது மூன்று ஹோட்டல்கள், ஒரு உணவகம், மரக்கறி விற்பனை நிலையங்கள் மற்றும் பழக்கடை போன்றனவும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தவும், ஆரோக்கியத்தை கவனத்தில் கொண்டும் எங்கள் பணி என்றும் தொடரும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தெரிவித்தார்.

## சம்மாந்துறை

# சிறைச்சாலை பஸ்ஸிலிருந்து கைதி தப்பியோட்டம்



(முகம்மட் முக்தார்)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் சம்மாந்துறை நீதிமன்றத்திற்கு அழைத்து செல்லப்பட்டபோது, சிறைக்காவலர்களின் பிடியிலிருந்து தப்பியோடியுள்ளார்.

தப்பிச்சென்ற சந்தேக நபரை பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் தீவிரமாக தேடி வருகின்றனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்திற்கு சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றிவரப்பட்ட சமயம் பாய்ந்தோடியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை (20) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 28 வயது கைதி ஒருவரே சிறைக்காவலர்களின் பாதுகாப்பையும் மீறி தப்பிஓடியுள்ளார். தப்பிச்சென்ற கைதி சம்மாந்துறை உடங்கா 02 பகுதியைச் சேர்ந்த ரிசாட் முகம்மட் சாதிக் என தெரியவந்துள்ளது. சந்தேக நபர் கடந்த 2024.12.07ம் திகதி போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் ஆவார். கைதி தப்பிச்சென்ற சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மேம்பாலத்தின் கீழ் உயிரிழந்த சிசு மீட்பு

கொழும்பு, தெமட்டகொட மேம்பாலத்தின் கீழ் கைவிடப்பட்ட நிலையில் சிசுவின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். வீதியில் பயணித்த ஒருவர் தெமட்டகொட பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், குறித்த இடத்திற்கு சென்று பார்த்த போது, துணியால் சுற்றப்பட்ட நிலையில் சிசுவின் சடலம் காணப்பட்டதாக தெரிவித்த பொலிஸார், கொழும்பு லேடி ரிட்ச்வே சிறுவர் வைத்தியசாலைக்கு சிசுவை எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுத்தபோதிலும் , சிசுவைப் பரிசோதித்த வைத்தியர்கள் சிசு ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறியதாகத் தெரிவித்தனர். நல்ல உடல் நிலையுடன் காணப்பட்ட சிசு, கைவிடப்படுவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் பிறந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்த பின்னர் தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## கட்டுப்படுத்த முடியாவிட்டால் கடிவாளம் இடுங்கள்

இந்த வருடம் விடை பெறுவதற்கு இன்னும் எட்டு நாட்களே இருக்கின்றன. பண்டிகைக் கால பரபரப்பும் தொடங்கிவிட்டது. புதன்கிழமை நத்தார் பண்டிகை. அதனை தொடர்ந்து புத்தாண்டு பிறப்பு. தைப்பொங்கல். சித்திரை புத்தாண்டு....

இவ்வாறே, பண்டிகை காலம் இலங்கையில் சிறப்புறுகிறது.

இலங்கையில் எங்கு பார்த்தாலும், மகிழ்ச்சியின் எதிரொலியை காண முடிகின்றது. அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களில் எல்லாம் கொண்டாட்டங்கள் களைகட்டத் தொடங்கிவிட்டன. என்றாலும், நாட்டு மக்களிடம் கவலைகள் குறைந்ததாக இல்லை. கட்டுக்கடங்காத விலைவாசிகளால் மக்கள் கடுமையாக நொந்து போயிருக்கிறார்கள்.

பண்டிகை காலத்தை வைத்து, வர்த்தகப் பெருச்சாளிகள், மக்களை சுரண்டி - வாட்டி எடுக்கின்ற நிலை பூதாகரமாகத்தான் இருக்கிறது. பொருளாதார நெருக்கடிகளால் நொந்து போய் கிடக்கின்ற இந்த மக்களுக்கு, பண்டிகைக்கால விலை அதிகரிப்புகளும், வர்த்தகர்களின் கபடத்தனங்களும் தாங்க முடியாத சுமையை ஏற்படுத்துகிறது. காலம் காலமாக இருந்து வருகின்ற இந்த செயற்கை நெருக்கடிக்கு தீர்வு காண முடியாமல் தான் இருக்கிறது.

மாற்றம் என்ற ஒன்றுதான் மக்களின் மனங்களில் இன்றும் நீடிக்கிறது. 159 ஆசனங்களை வழங்கி, எதிர்பார்ப்பையும் ஆதங்கத்தையும் ஜனநாயக மொழியில் சொல்லித் தீர்த்து இருக்கிறார்கள். ஆனால், வர்த்தகப் பெரும்புள்ளிகளையும், சுரண்டல் பேர்வழிகளையும் இன்னும் கடுகளவும் கட்டுப்படுத்த முடியாத நிலைதான் தொடர்கின்றது.

இடதுசாரி சிந்தனையை மக்கள் மனங்களில் விதைத்து, இந்த நாட்டில் அரசியல் மறுமலர்ச்சியை ஏற்படுத்த துடித்தவர்கள், ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர். பல்வேறு புரட்சிகளை நடத்தி தோல்வி கண்ட ஜே.வி.பி, இலக்கை அடையும் பாதையை மாற்றி மக்களை அரசியல் மயப்படுத்தியது . இதன் அறுவடை தான், தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கியது என்பது வரலாறு.

இந்த அரசாங்கம் பதவியேற்கப் போகிறது என்று அறிவிக்கப்பட்டதும், வர்த்தகப் பெரும்புள்ளிகள் பலர், நாட்டை விட்டே தப்பி சென்றார்கள். சந்தையில் திடீரென பொருட்களின் விலைகள் குறைந்தன. பதுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி உட்பட பல்வேறு அத்தியாவசிய பொருட்கள் சந்தைக்கு விடப்பட்டன. ஆட்சிக்கு வந்ததும் கடுமையான நடவடிக்கையில் இறங்குவார்கள் என்று வியாபாரிகளும் பெரும் வர்த்தகர்களும் அச்சம் கொண்டிருந்தார்கள்.

ஆனால், இன்றைய சந்தை நிலையை பார்க்கின்ற பொழுது, நினைத்தபடி விலையை கூட்டலாம் என்ற அசட்டு துணிச்சல், வர்த்தகர்கள் மத்தியில் மீண்டும் உருவாகியிருக்கிறது. தொடரும் இந்த அடாவடித்தனங்களுக்கு கடிவாளம் இடப்பட்டே ஆக வேண்டும்.

பொதுமக்களை கேடயமாக வைத்து, வர்த்தக மாபியாக்கள் நடத்துகின்ற மோசமான செயல்பாடுகளை கட்டுப்படுத்துவோம் என்ற உறுதிமொழியோடுதான், இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை கையில் எடுத்தது. என்றாலும், வர்த்தகப் பெரும்புள்ளிகள் அரசாங்கத்தை பொம்மலாட்டம் போல் நடத்துவது, மக்களின் ஆணையை அவமதிக்கும் செயலாகும்.

மக்கள் நலம் சார்ந்து, முதலாளித்துவம் ஒரு போதும் செயல்படாது என்பதை, சமூக விஞ்ஞானம், நமக்கு தெளிவுபடுத்தி இருக்கிறது. பண்டிகை காலத்தை வைத்து, பொருளாதார ரீதியில் மக்களை வதைக்கின்ற வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் முழுமையான பொறுப்பாகும்.

விலைகளை கட்டுப்படுத்துவதற்காக சுற்றி வளைப்புகளை நடத்துகின்ற அரசாங்கத்தின் செயல்பாடு பாராட்டுக்குரியது. இந்த விடயத்தில், நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் களமிறங்கி செயல்பட்டாலும், வர்த்தகர்களோடு மோதுகின்ற அளவுக்கு தைரியம் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. கடந்த காலங்களில், சுற்றி வளைப்புக்களில் ஈடுபட்ட அதிகாரிகள் பலர், கொலை அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். ஆட்சியில் இருந்தவர்களின் அரசியல் பின்புலத்தோடுதான், இத்தகைய நாடகங்கள் நடத்தப்பட்டன. மக்களால் தேர்வு செய்யப்பட்ட இந்த ஆட்சியில், அத்தகைய கேவலமான செயல்கள் தொடராது என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் வேரூன்றி உள்ளது.

அதற்காக, வியாபாரத்தில் ஈடுபடுகின்றவர்களை, முற்றாக அளிக்க வேண்டும் என்ற கருத்தை நாம் இங்கு முன்வைக்கவில்லை. கொள்ளை இலாபம் அடித்து, அப்பாவி மக்களின் தலையில் சுமை ஏற்றுவதையே நாம் கடுமையாக எதிர்க்கிறோம். இந்தப் பத்தியில் இது தொடர்பாக பல தடவை சுட்டிக் காட்டி இருக்கிறோம்.

மக்களை சுரண்டுவதில், கடந்த கால அரசாங்கங்கள் நவீன சுரண்டல்வாத கொள்கையை மறைமுகமாக நடைமுறைப்படுத்தியது. அப்பாவி மக்களுக்கு இது சரியாக புரிந்து கொள்ள முடியவில்லை. வர்த்தகப் பெரும்புள்ளிகள் உடன் பேரம் பேசிய அரசாங்கங்கள், அவர்களிடம் இருந்து கமிஷன் பெற்று வந்த விடயங்கள் கடந்த காலங்களில் அம்பலத்துக்கு வந்தன. முதலாளிகளிடமிருந்து பெறப்படுகின்ற பணத்துக்கு ஈடு செய்யக் கூடிய வகையில், அவர்களுடைய வியாபார பொருள்களுக்கு விலை அதிகரிப்பை செய்வதற்கு உடன்பட்ட வரலாறு காலம் காலமாக நடந்து வந்திருக்கிறது.

எதிர்க் கட்சியில் இருந்த காலத்தில், இந்த விடயங்களை, மக்களுக்கு எடுத்துச் சொன்னதெல்லாம், ஜேவிபி தான். ஆகவே, ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற இந்த அரசுக்கு, இவையெல்லாம் புதிதான விடயங்கள் அல்ல. தரகு பணம் பெறுவதும், அதனை ஈடு செய்வதற்கு மக்களை அடகு வைப்பதும்தான் நடந்து வந்த அரசியல் சமாச்சாரங்கள்.

இந்த நிலை தொடர அனுமதிக்க கூடாது. வர்த்தகர்கள் உங்களைப் பயன்படுத்துவதற்கு ஒரு போதும் அனுமதிக்காதீர்கள். மக்கள் போராட்டத்தை, அகிம்சை வழியில் முன்னெடுத்து, அரசியல் அதிகாரத்தை வென்றெடுத்த நீங்கள், நிச்சயம், வாழ்க்கைச் சுமையிலிருந்து மக்களை மீட்டெடுத்தே ஆக வேண்டும். முதலாளிகளுக்கு கடிவாளம் போட முடியாவிட்டால், சட்டத்தை முழுமையாக கையில் எடுங்கள். வாக்களித்த மக்கள் உங்களோடுதான் நிற்பார்கள்.



## “அக்கா ஓமான் சென்று ஒரு வருடமாகியும் எங்களுடன் தொடர்புகள் இல்லை”...

வெல்லாவெளி நிருபர்

**2022.10.20 அன்று பணி பெண்ணாக வெளிநாடு சென்ற மட்டக்களப்பு மாவட்டம் முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த இராசலிங்கம் யசோமலர் என்பவர் கடந்த ஒரு வருடமாக குடும்பத்தினரோடு எந்தவித தொடர்புகளும் இல்லாமல் இருப்பதாகவும் அவரை விரைவில் மீட்டுத் தருமாறு அவரது குடும்பத்தினர் உருக்கமான வேண்டுகோளை விடுகின்றனர்.**

இவ்விடையம் தொடர்பில் உரிய பெண்ணின் குடும்பத்தினர் கடந்த வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர். இதன்போது அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்.

“குடும்பத்தின் கஷ்ட நிலைமையினைக் கருத்தில் கொண்டு பணிப்பெண்ணாக ஒமான் நாட்டிற்கு கடந்த 2022 ஆம் ஆண்டு முகவரொருவர் மூலமாக ஒமானுக்குச் சென்றதாகவும் அங்கு சென்று இரண்டு மாதங்கள் வேலை எதுவும் இல்லாது இருந்ததாகவும் பின்னர் பணிப்பெண்ணாக ஒரு வீட்டில் நியமிக்கப்பட்டதாகவும்” உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் உறவினர்கள் தெரிவிக்கையில்

“ஓமான் சென்ற எமது அக்காவான யசோமலர் அங்கிருந்து இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தொலைபேசி அழைப்பின் மூலம் தொடர்பு கொண்டு எம்முடன் கதைப்பார். பின்னர் அந்த தொலைபேசி தொடர்பாடல் ஐந்து நாட்களுக்கு ஒரு முறை தொடர்புகொண்டுவந்தார். முதல் தடவையாக ஒரு இலட்சம் ரூபாவும், இரண்டாவது தடவையாக 70,000 ரூபாவும், இறுதியாக மூன்றாவது தடவையாக 2023.12.21 அன்று 75,000 ரூபா பணமும்தான் இதுவரை எமக்கு ஒமானிலிருந்து அவர் இங்கு அனுப்பியுள்ளார்” என்று தெரிவித்மதார்.

தொடர்ந்து உறவினர்கள் கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்ததாவது,

“எமது அக்காவின் தொலைபேசியினை அவர் பணிபுரியும் வீட்டார் அபகரித்து வைத்துள்ளதாகவும் 5 நாட்களுக்கு ஒரு முறை மாத்திரம் எம்முடன் கதைப்பதற்கு தொலைபேசியை வழங்குவதாகவும் “ அக்கா எங்களுக்குத் தெரிவித்தார்.

இறுதியாக அக்கா கடந்த 2023.12.25 ஆம் திகதி தான் தொலைபேசியில் கதைத்தார். அதற்குப் பின்னர் சுமார் ஒருவருடகாலமாக எம்முடன் எதுவித தொடர்பும் இல்லாமலேயே உள்ளார். எங்களது அக்காவிற்கு என்ன நடந்தது என்று தெரியாமலும் தொடர்பு கொள்வதற்கான வழிகளும் இல்லாமல் நாம் அவதியுறுகின்றோம் “என்று தெரிவித்தனர்.

பின்னர் அக்கா தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

“வெளிநாடு சென்ற எமது அக்காவிற்கு 15 வயதில் ஒரு பெண்பிள்ளையும், 11 வயது மற்றும் 4 வயதுடைய இரு ஆண் பிள்ளைகளும் உள்ளார்கள். தற்போது அந்தப் பெண்ணின் கணவரும் குழந்தைகளும் அவர்களது தாயுடன் கதைப்பதற்கு ஆசையாய் உள்ளார்கள். அந்த பிள்ளைகள் மூவரும் எம்முடன்தான் உள்ளார்கள்.



வெளிநாடு சென்ற குறித்த பெண்ணை நாட்டிற்கு மீள கொண்டு வருவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்தும் எமது நடவடிக்கைகள் எதுவும் பலனளிக்காமை எமக்கு மிகுந்த கவலையாக உள்ளது” என குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

**“எமது அக்காவின் தொலைபேசியினை அவர் பணிபுரியும் வீட்டார் அபகரித்து வைத்துள்ளதாகவும் 5 நாட்களுக்கு ஒரு முறை மாத்திரம் எம்முடன் கதைப்பதற்கு தொலைபேசியை வழங்குவதாகவும்” அக்கா எங்களுக்குத் தெரிவித்தார்.**

மேலும் தெரிவிக்கையில்,“எமது அக்காவை வெளிநாட்டுக்கு அனுப்பிய முகவரிடம் நாம் தொடர்பு கொண்டு

**இறுதியாக அக்கா கடந்த 2023.12.25 ஆம் திகதி தான் தொலைபேசியில் கதைத்தார். அதற்குப் பின்னர் சுமார் ஒருவருடகாலமாக எம்முடன் எதுவித தொடர்பும் இல்லமேலேயே உள்ளார்.**

கேட்டபோதும் இவ்விடயம் தொடர்பாக எதுவும் தெரியாது எனவும் சற்று வேலையாக இருக்கின்றோம் இப்பொழுது கதைக்க முடியாது எனவும் அலட்சியமாக பேசி எங்களது மனங்களை அலட்சியப்படுத்துபவராக அந்த முகவரின் செயற்பாடுகள் காணப்படுவதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து ஓமான் நாட்டுக்கு சென்றவரின் சகோதரிகள் தெரிவிக்கையில், பிரதேச செயலகத்தின் அனுமதியுடனோ, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் மூலமாகவோ எமது அக்காவை அவர்கள் ஓமான் நாட்டிற்கு அனுப்பி வைக்கவில்லை. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் போலி ஆவணங்களைத் தயாரித்துக் கொண்டுதான் எமது அக்காவை வெளிநாட்டிற்கு அனுப்பியுள்ளார்கள். எமது அக்காவை மீட்டெடுப்பதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கும், பிரதேச செயலகத்திற்கும் சென்று நாம் விசாரித்த போதுதான் அக்கா உரிய முறையில் வெளிநாடு செல்லவில்லை என எமக்கும் தெரியவந்தது. அக்காவின் கடவுச்சீட்டின் இலக்கத்தை வழங்கினால் மாத்திரமே தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அக்காவின் கணவர் வேலைக்கு செல்லாது வீட்டிலே இருந்தார், இதனால் பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் கல்வி உணவு போன்ற விடயங்களில் சிரமத்தை எதிர்நோக்கியதன் விளைவாகவே எமது அக்கா வெளிநாடு சென்றார்.

எனவே எமது அக்காவை எமது வீட்டுற்கு அழைத்து தருமாறும், நாமும் அக்காவின் கணவர் மற்றும் பிள்ளைகளும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஊடகங்கள் வாயிலாக கோரிக்கை முன்வைக்கின்றோம். என முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த ஓமான் சென்றுள்ள இராசலிங்கம் யசோமலரின் சகோதரிகளான புஸ்பவதி, ரதிமலர் மற்றும் யசோமலரின் தாயார் 54 வயதுடைய சந்திராதேவி யசோமலரின் 15, 11 மற்றும் 4 வயதுகளை உடைய பிள்ளைகளும், உருக்கமான வேண்டுகோளை விடுப்பதாகத் தெரிவித்தனர்.



# வடமாகாணத்தில் அரிசியின் விலை குறைவடையும் சாத்தியம்

## ஆலை உரிமையாளர்கள் தெரிவிப்பு



**புு.கஜிந்தன்**

வடக்கு மாகாணத்தில் இன்னும் ஒரு மாதத்துக்குள் அரிசியின் விலை நிச்சயம் குறைவடையும் என வடக்கு மாகாணத்தின் பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் வடக்கு மாகாணத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களே, வடக்கு மாகாணத்தில் விளையும் நெல்லின் பெரும்பகுதியைக் கொள்வனவு செய்வதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும் என அமைச்சர் இ.சந்திரசேகரன் மற்றும் ஆளுநர் நா.வேதநாயகன் இருவரும் தெரிவித்தனர்.

கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அமைச்சர் இ.சந்திரசேகரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் (21) வடக்கு மாகாண அரிசி ஆலை உரிமையாளர்களுடனான சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

**வடக்கு ஆளுநர்,**

அரிசியின் விலையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பால் ஏழைகள் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிட்டதுடன், அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரிசியை விற்பனை செய்யக் கூடிய நிலைமை இல்லாதிருப்பதற்கான காரணத்தைக் கேட்டறிந்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையும் நிர்ணய விலையில் விற்பனை செய்யாமல், அவற்றின் 'லேபல்கள்' மாற்றப்பட்டு அதிகரிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

**அமைச்சர் சந்திரசேகரன்,**

அரிசியை வைத்துக் கொண்டு தட்டுப்பாடு ஏற்படுத்தியமை எல்லோருக்கும் தெரியும், அவ்வாறான நிலைமை தொடரக்கூடாது என்பதில் அரசாங்கம் கவனத்துடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அரசாங்கம் எதிர்காலத்தில் 3 இடங்களில் புதிதாக அரிசி ஆலையை அமைப்பதற்கு திட்டமிடுவதாகவும் குறிப்பிட்ட அவர், கடந்த காலங்களில் நெல்லைக் கொள்வனவு செய்தபோது நீங்கள் அதை அரிசியாக்கும்போது நிர்ணயமாகும் விலையைவிட தற்போது அதிக விலைக்கே விற்பனை செய்வதாகவும் தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்களைப் பழிவாங்குவதாக நினைக்க வேண்டாம். அதிகமான ஏழைகள் வாழும் மாகாணம் எமது மாகாணம் என்பதைக் கவனத்தில் எடுத்து சமூகப் பொறுப்புடன் செயற்படுமாறும் வலியுறுத்தினார்.

**அரிசி ஆலை உரிமையாளர்கள்,**

வடக்கு மாகாண விவசாயிகளின் நெல்லை வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் பியர் உற்பத்திக்கும் கொள்வனவு செய்கின்றார்கள். அத்துடன் இங்கிருந்து அவர்கள் நெல்லைக் கொள்வனவு செய்துகொண்டு சென்று திருப்பி எங்களுக்கு அதிக விலைக்கு வழங்குகின்றனர்.

எங்களுக்கு வங்கிகள் ஊடாக அதிகளவான கடன் வசதிகள் கிடைப்பதில்லை. ஆனால் அவர்களுக்குக் கிடைக்கின்றது. இங்குப் போதிய ளவு களஞ்சிய வசதிகள் இருக்கும் நிலையில், வங்கிகள் கடன் எல்லையை அதிகரித்து வழங்கினால் எம்மால் விவசாயிகளிடமிருந்து அதிகளவு நெல்லைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிட்டனர்.

மேலும், நெல் அறுவடைக்கு முன்னராகவே நெல்லுக்கான மற்றும் அரிசிக்கான விலையை நிர்ணயம் செய்வதன் ஊடாக இவ்வாறான நெருக்கடி நிலைமையைத் தவிர்க்க முடியும் எனவும் குறிப்பிட்டனர்.

எங்களுக்கு வங்கிகள் ஊடாக அதிகளவான கடன் வசதிகள் கிடைப்பதில்லை. ஆனால் அவர்களுக்குக் கிடைக்கின்றது. இங்குப் போதிய ளவு களஞ்சிய வசதிகள் இருக்கும் நிலையில், வங்கிகள் கடன் எல்லையை அதிகரித்து வழங்கினால் எம்மால் விவசாயிகளிடமிருந்து அதிகளவு நெல்லைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிட்டனர்.

மேலும், நெல் அறுவடைக்கு முன்னராகவே நெல்லுக்கான மற்றும் அரிசிக்கான விலையை நிர்ணயம் செய்வதன் ஊடாக இவ்வாறான நெருக்கடி நிலைமையைத் தவிர்க்க முடியும் எனவும் குறிப்பிட்டனர்.

## வவுனியாவில் அதிக பனிமூட்டம்

**கி.வசந்தன்**



வவுனியாவில் அண்மைய நாட்களை விடவும் நேற்றுமுன்தினம் (22) சற்று அதிக பனிமூட்டமாகக் காணப்பட்டது. கடும் பனிமூட்டம் காரணமாகப் போக்குவரத்தை மேற்கொள்வதில் வாகன சாரதிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக ஏ9 வீதி மற்றும் மன்னார் வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் ஒளியைப் பாய்ச்சியபடி சென்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## ஓமந்தையில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

**கி.வசந்தன்**



வவுனியா, ஓமந்தை, சேமமடு பகுதியில் பல காலமாகச் சூட்சுமமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சேமமடு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அச்சந்தர்ப்பத்தில் 150,000 மில்லி லீற்றர் கோடா மற்றும் 150,000 மில்லி லீற்றர் வடி ஆகியன மீட்கப்பட்டதுடன் ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

## வவுனியாவில் 3 பெண்கள் கைது

**கி.வசந்தன்**

வவுனியாவில் விபசாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்ட மது ஒழிப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மாவட்ட மது ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி கஜேந்திரன் தலைமையில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் விபசாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மன்னார் நகரசபைக்கு மூன்று கோடிக்கு மேல் வருமானம்



**எஸ்.ஆர்.லெம்பேட்**

மன்னார் நகர சபையின் ஊடாக பண்டிகைக் கால வியாபார நிலையங்கள் பகிரங்க குத்தகைக்கு விடப்பட்ட நிலையில் அதன் ஊடாக மன்னார் நகர சபைக்கு 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாக மன்னார் நகர சபை அறிவித்துள்ளது.

மன்னார் நகரசபையின் பண்டிகை கால வியாபார நிலையங்களை ஏல விற்பனை மூலமாக 10 நாட்களுக்குக் குத்தகைக்கு விடும் செயல்பாடு வெள்ளிக்கிழமை (20) மன்னார் நகர சபை செயலாளர் தலைமையில் இடம்பெற்ற நிலையில் 300 கடைகள் ஏல விற்பனை மூலம் வழங்கப்பட்ட நிலையில் மன்னார் நகரசபைக்கு 3 கோடியே இருபது இலட்சம் ரூபா வருமானம் பெறப்பட்டதுடன் மேலதிகமாக 16 கடைகளுக்கான ஏல விற்பனை இடம்பெற்றது. கடந்த வருடம் பண்டிகை கால வியாபார நடவடிக்கைகளின் போது 320 கடைகள் பகிரங்க ஏல விற்பனை ஊடாக 2 கோடியே 21 இலட்சத்துக்கு வழங்கப்பட்ட நிலையில் இம்முறை ஒரு கோடி ரூபாய் மேலதிக வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

# முள்ளிக்குளம் காணி தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆராய்வு



**எஸ்.ஆர்.லெம்பேட்**

முள்ளிக்குளம் பகுதியில் பல வருடங்களாக மக்களின் காணிகளில் கடற்படையினர் நிலை கொண்டுள்ளமை தொடர்பில் விசேட ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் (21) மதியம் மன்னாரிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த நிலையில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் விசேட சந்திப்பு இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைக்கப்பட்டு, மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பு, படையினர் வசம் காணப்படும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை, காற்றாலை மற்றும் கனிய மண் அகழ்வினால் மன்னார் தீவில் ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதி நிதிகள் கேட்டறிந்து கொண்டனர். மேலும் மன்னாரில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைக்கப்பட்டதுடன், அவற்றை நிவர்த்தி செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் முள்ளிக்குளம் பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

முள்ளிக்குளம் பகுதியில் பல வருடங்களாக மக்களின் காணிகளில் கடற்படையினர் நிலை கொண்டுள்ளமை குறித்து ஆராய்ந்துள்ளதோடு யுத்தம் முடிவடைந்து இன்று 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் கடற்படையினர் குறித்த மக்களின் காணிகளை விடுவிக்காமை குறித்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் நேரடியாக ஆராய்ந்துள்ளனர்.

மேலும் ஆலயத்திற்கு மக்கள் சென்று வருவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தனர்.

## காரைநகர் பிரதேச செயலகத்தின் ஒளி விழா

யாழ். காரைநகர் பிரதேச செயலகத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கம் நடாத்தும் ஒளி விழாவா இன்று (23) திங்கட்கிழமை பி.ப 1.30 மணி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் ம.அன்ரன் ஜேசுதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு, பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச பிரதேச செயலாளர் செல்வி.ந.ரஞ்சனா கலந்து கொள்ளவுள்ளதுடன், சிறப்பு விருந்தினர்களாக அருட்பணி பா.பிறையன் அடிகளார், அமெரிக்கன் சிலோன் மிசன் அருட்பணி சுதாகரன் சுதர்சினி மற்றும் அசெம்ளி ஒவ் கோட் அருட்பணி யோசுவா பன்னீர்ச்செல்வம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கலாம் உலக சாதனை நிகழ்வு



முள்ளியவளை பவுசர் ஸ்ரீபாஸ்கரன் முத்துலட்சியின் பயிற்சி, வழிகாட்டல் ஊடாக நாட்டின் பல்வேறு மாவட்டத்தினை சேர்ந்த 46 பெண்கள் உலக சாதனைபதிவு செய்தமைக்கான கலாம் உலக சாதனை புத்தகம் ஊடாக சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முள்ளியவளையில் நடைபெற்றுள்ளது.

## மாவீரர் குடும்ப நலன் தொடர்பாக கலந்துரையாடல்

**பு.கஜிந்தன்**

மாவீரர், போராளி குடும்ப நலன் காப்பகத்தின் ஒன்று கூடலும் எதிர்கால நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலும் நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வைத் தொடர்ந்து ஊடக சந்திப்பும் இடம்பெற்றது.

மாவீரர்கள், போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தின் தலைவர் தேவராசா தீபன் கருத்து தெரிவிக்கையில்,



எதிர்வரும் காலத்தில் மாவீரர் நினைவேந்தல்களைத் தாம் பொறுப்பு எடுத்துச் செய்வதாக தெரிவித்தார். மேலும், அதற்கேற்றவாறு தாம் நிர்வாகங்களைத் தேர்வு செய்து முன்னாள் போராளிகள் தலைமை தாங்கி மாவீரர் நினைவேந்தலை நடத்துவதாகவும் அதற்கு முன்னாயத்தமான கூட்டமாக இது நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

# காலத்தை வென்ற கருணைக்கடல் எம்.ஜி.ஆர்



## நாளை 37 ஆவது நினைவு தினம்

**இந்த மனித சமுதாயம் செம்மலைப் போல் இன்னுமொருவரை காண இன்னும் நானூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். வட்டத்துக்கு முடிவு ஏது? தொடக்கம் ஏது? என்று கூற முடியாது. அப்படி அண்ணல் எம்.ஜி.ஆர் வரலாற்றுக்கும் முடிவும் தொடக்கமும் இல்லை எனலாம்.**

**திரையுலகம் அவரை இன்றுவரை மறக்கவில்லை. திரையில் மறையாத மாமனிதன் எம்.ஜி.ஆர் என்பதை மறுப்பார் யாருமில்லை. திரைப்படங்கள் ஓட அவர் இன்றும் தேவைப்படுகிறார்**

■ கலாபூஷணம் கல்லொளுவை பாரிஸ்

மக்கள் திலகம் எம்.ஜி. ராமச்சந்திரன் மறைந்து பல 37 வருடங்கள் உருண்டோடிவிட்டன. நாளை (24) அவரது 37 ஆவது நினைவுத் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. எம்ஜிஆரின் தோற்றம் 17.01.1917. இவர் இவ்வுலகை விட்டு மறைந்த தினம் 24.12.1987. இன்றும் கூட தென்னிந்தியாவில் மக்கள் திலகத்தின் தோற்றம், மறைவு போன்றவற்றை ஆடி மாதத்தில் அம்மனுக்கு கூழ் காய்ச்சி விழா எடுப்பதைப் போல மாவட்டத்துக்கு மாவட்டம், நகரத்துக்கு நகரம், கிராமத்துக்கு கிராமம் ஏன் தெருவுக்கு தெரு எம்.ஜி.ஆர் கொள்கைப் பாடல்களைப் போட்டு அவர் நினைவு கொண்டாடப்படுவது எவரும் நினைத்துப் பார்க்க முடியாத ஆச்சரியமான அதிசயம். “சொல்லுதல் யார்க்கும் எளிய அறியவராம் சொல்லிய வண்ணம் செயல்” என்ற வள்ளுவரின் வாக்குக்கு உதாரணமாக வாழ்ந்து சென்றிருக்கிறார் மக்கள் திலகம்.

வள்ளுவர் பாடலுக்கு மட்டுமல்ல,“வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கேடி மக்களின் மனதில் நிற்பவர் யார்” என்ற தனது பாடல் வரிகளுக்கு தானே முன்னுதாரணமாக வாழ்ந்திருக்கிறார் எம்.ஜி.ஆர். நிறைய மனிதர்கள் வாழும்போதே மரணித்துக் கொண்டிருக்கிறார்கள் மக்கள் திலகம் மரணத்தின் பிறகும் பின்னரும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இறைவன் சாதாரண மனிதர்களைப் படைக்க நாற்பது நாள் ஆகிறது, ஆனால் மகான்களை தீர்க்கதரிசிகளாய் படைக்க நானூறு வருடங்களை எடுத்துக்கொள்கிறார் என்ற ஒரு கூற்று இருக்கின்றது. இது “ரிக்” வேதத்தில் உள்ள சுலோகம். அந்த ரீதியில் பார்த்தால் இந்த மனித சமுதாயம் செம்மலைப் போல் இன்னுமொருவரை காண இன்னும் நானூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். வட்டத்துக்கு முடிவு ஏது? தொடக்கம் ஏது? என்று கூற முடியாது. அப்படி அண்ணல் எம்.ஜி.ஆர் வரலாற்றுக்கும் முடிவும் தொடக்கமும் இல்லை எனலாம்.

எம்.ஜி.ஆரின் முதல் மனைவியின் பெயர் பார்கவி தங்கமணி. 1938 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். 1943 ஆம் ஆண்டு சதானந்தவதி என்பவரை இரண்டாவது மனைவியாக எம்.ஜி.ஆர் மணந்தார். நோயின் காரணமாக இரண்டு மனைவிகளும் இளமையிலேயே இறந்து விட்டதால் நடிகை வீ.என். ஜானகியை மூன்றாவது மனைவியாக எம்.ஜி.ஆர் திருமணம் செய்துகொண்டார்.

கலை வித்தகர் எம்.ஜி.ஆர் கலையுலகில் செய்த சாதனைகள் பல. இவர் பெற்ற பரிசுகள், “மலைக்கண்ணன்“ இந்திய அரசின் வெள்ளிப் பதக்கம் (1954), “அலிபாபாவும் நாற்பது திருடர்களும்“ சினிமாரசிகச் சங்கப்பரிசு (1956), “நாடோடி மன்னன்“ சினிமாக் கதிர் சிறந்த இயக்குநர் பரிசு (1958), “எங்க வீட்டுப் பிள்ளை“சினிமா ரசிகச் சங்கப் பரிசு (1965), “காவல்காரன்“ தமிழக அரசின் விருது (1967), “குடியிருந்த கோயில்“ தமிழக அரசின் விருது (1968) “நம் நாடு“ சினிமா ரசிகச் சங்கப் பரிசு (1969), “அடிமைப்பெண்“ பிலிம்பேர் விருது (1969) “எங்கள் தங்கம்” சிறந்த இரண்டாவது படத்துக்கான தமிழக அரசின் விருது (1970), “ரிக்சாக்காரன்” பாரத் விருது (1971) “மதுரையை மீட்டிய சுந்தரபாண்டியன்” தமிழக அரசின் விருது (1978) இப் படம் எம்.ஜி.ஆரின் கடைசிப் படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் மறைந்தாலும் இன்னும் மக்கள் மனதில் ஆழமாக பதிந்து இருக்கிறார். மக்களுக்காகவே வாழ்ந்த எம்.ஜி.ஆர் கடைசிவரை மக்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்துகொண்டு இருந்திருக்கிறார். தன்னைத் தேடி வருபவரை இரு கை கூப்பி வரவேற்று தாய் உள்ளத்தோடு விசாரித்து உதவுவார். எம்.ஜி.ஆர் வாழ்க்கையில் பல மறக்க முடியாத சம்பவங்கள் நடந்தன. இவரை நம்பியவர்கள் கெட்டது கிடையாது.

எதிரிக்கும் உதவும் பொன்மனம் கொண்டவர் எம்.ஜி.ஆர். இதனால்தான் சைவப் பெரியார் கிருபானந்த வாரியார் இவரைப் “பொன்மனச் செம்மல்” என்றார். இப்பெயர் இறுதி வரைக்கும் நீடித்து இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. ஏழைகளின் இதயங்களில் சிம்மாசனமாக அமர்ந்துக் கொண்டிருக்கும் இவர் மனிதநேயத்தில் ஒரு இதயம். இவருக்கு புரட்சி நடிகர் என்ற பட்டத்தைக் கொடுத்தவர் கலைஞர் மு.கருணாநிதி. புரட்சித் தலைவர் என்று முதலில் எழுதியது தென்னகம் பத்திரிகையில் சே.ஏ.கிருஷ்ணசாமி.

நூறுநாள் படம் ஓடி வெற்றிவிழா கொண்டாடி அதற்காக பலருக்கு கேடயம், மோதிரம் வழங்கியதில் முதல்வர் படம் –“நாடோடி மன்னன்”. ஒரு படத்துக்கு கதை கொண்டு போய் அங்கு டிவியில் ஒரு பெண்ணை பார்த்து அதற்கு பாத்திரப் படைப்பு அமைத்து படத்தில் நடிக்க வைத்து வெற்றி கண்ட முதல்வர் படம்– உலகம் சுற்றும் “வாலிபன்”, ஸ்லோ மோஷனில் தமிழகத்தில் படமெடுக்கச் சொன்னதில் முதல்வர். படம் – கலையரசி.

துப்பாக்கியால் மகாத்மாவும் கென்னடியும் சுடப்பட்டு இறந்தார்கள். ஆனால், துப்பாக்கியால் சுடப்பட்டு மூன்று குண்டு பாய்ந்து பிழைத்த முதல்வர் இவர். நோயாளிகளை குறிப்பிட்ட நேரத்தில் தான் அரசு மருத்துவமனையில் பார்க்க வசதி இருந்தும் குண்டடிபட்ட தன்னை எல்லா நேரத்திலும் பார்க்க அனுமதி வழங்கிய முதல்வர், ஒரு பெரிய நூல் நிலையத்தை தனிப்பட்ட முறையில் வைத்திருந்த முதல்வர்.

எம்ஜிஆர் அமைத்த ஆட்சிக்கு ஆதரவு தந்ததே இந்த வெள்ளித் திரைதான். அரசியல் உலகம் எப்படியென்று தெரியாது. ஆனால், திரையுலகம் அவரை இன்றுவரை மறக்கவில்லை. திரையில் மறையாத மாமனிதன் எம்.ஜி.ஆர் என்பதை மறுப்பார் யாருமில்லை. திரைப்படங்கள் ஓட அவர் இன்றும் தேவைப்படுகிறார். அவரது படம் பெரிய “இடத்துப்பெண்”, அதே கதைதான் “சகலகலா வல்லவன்“. அவர் எடுக்க இருந்த படம் “தூங்காதே தம்பி தூங்காதே”, “இணைந்த கைகள்”, அவர் கொடுத்த படத் தலைப்புகளே “நல்லதை நாடு கேட்கும்”, “நல்லதை கேட்போம்“, அவரது செல்லப் பெயர் “சின்னவர்” அப் பெயரில் ஒரு படம். அவரது பாட்டு “நாடு அதை நாடு...“அப்படியும் ஒரு படம் ஒரு படம் வெளிவந்தது.

எம்.ஜி.ஆர் சாதாரண காலங்களில் கைத்தறி வேட்டிதான் அணிவார். புதிய கைத்தறி வேட்டியை ஒரு முறைதான் அணிவார். கல்யாணம் மற்றும் மங்கள நிகழ்ச்சிகளில் பட்டு வேட்டி. இளம் மஞ்சள் நிற உடைகள் அணிய இவருக்கு பிடிக்கும். இவர் சின்ன வயதாக இருக்கும்போது அவரை அவரது அன்னையார் சத்தியபாமா மூகாம்பிகை கோயிலுக்கு அழைத்துச் செல்வது வழக்கம். இவருடைய அம்மா இறந்தபிறகு அவருக்கு தன் ராமாவரம் தோட்டத்தில் பெரிய கோயில் கட்டி தினமும் வழிபட்டு வந்தார். இது தவிர மூகாம்பிகை கோயிலுக்கு மாதாமாதம் சென்று வந்து கொண்டிருந்தார்.

எம்.ஜி.ஆர் மேடையில் பேசும்போது தம் ரசிகர்களை ரத்தத்தின் ரத்தமே! என்று அழைப்பார். அதற்குக் காரணம் 1967 இல் குண்டடிபட்டு எம்.ஜி.ஆர் சிகிச்சையில் இருந்தபோது ஏராளமான ரசிகர்கள் ரத்தம் கொடுத்திருக்கிறார்கள். இவர் இறந்த செய்தியை அமெரிக்காவில் வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை வெளியிட்டது. தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் மறைவுக்கு அமெரிக்க அரசு தனது அனுதாபங்களை வெளியிட்டது. அறிஞர் அண்ணா இறந்தபோது 1969 இல் இறுதிச்சடங்கு ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் 18 இலட்சம் பேர். எம்.ஜி.ஆரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் எண்ணிக்கை 28 இலட்சம் பேர். இவர் நடித்த படங்களின் எண்ணிக்கை 136. 1936 இல் சதிலீலாவதி இறுதிப்படம். மதுரையை மீட்டிய சுந்தரபாண்டியன் (1978) வரை திரையுலகில் ஜொலித்தார். ■

---

# “டியாகோ கார்சியாவில் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டமை சட்டவிரோதம்”




**இந்தியப் பெருங்கடலில் உள்ள பிரித்தானிய பிரதேசங்களுக்கான உச்சநீதிமன்றம் தீர்ப்பு**

**‘நரகம் போன்ற சூழலில்’ தங்க வைக்கப்பட்டதற்காக பெருந்தொகை இழப்பீடு வழங்க வேண்டியேற்படலாம்**

இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தில் இருக்கும் சிறிய தீவான டியாகோ கார்சியாவில் இலங்கைத் தமிழர்களை தடுத்து வைத்திருந்தமை சட்டவிரோதமானது என பிரித்தானியாவில் நீதிபதி ஒருவர் தீர்ப்பளித்துள்ளார்.

மாலைதீவுக்கு தென் மேற்கேயும், ஆபிரிக்க கண்டத்தின் தென் பகுதிக்கு வட மேற்கேயும் உள்ள சாகோஸ் தீவுகள் கூட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய தீவு டியாகோ கார்சியா. இந்தியப் பெருங்கடலில் இராணுவ கேந்திர ரீதியாக டியாகோ கார்சியா மிகவும் முக்கியமான ஒரு இடமாகும்.

அங்கு பிரித்தானிய மற்றும் அமெரிக்க படைகள் நிலைகொண்டுள்ளன. அது முற்றாக இராணுவப் பிரதேசமாக அறிவிக்கப்பட்ட ஒரு தீவாகும். அங்கு பொதுமக்கள் யாருக்கும் அனுமதியில்லை. தீவின் ஒரு பக்கம் அமெரிக்க கடற்படையும் மறுபக்கம் பிரித்தானிய படைகளும் உள்ளன.

இந்நிலையில் இலங்கையிலிருந்து கடந்த 2021ஆம் ஆண்டு தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் நோக்கில் படகு ஒன்றில் பயணமான 60றக்கும் அதிகமான தமிழர்கள் கனடாவில் அகதி தஞ்சம் கோரும் நோக்கில் பயணமாகிய வேளையில், அந்த தீவிற்கு அருகில் செல்லும் போது, படகு பழுதானதால், அந்த தீவில் இறங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் டியாகோ கார்சியா தீவு முற்றாக இராணுவப் பிரதேசம் என்பதால், அங்கு இறங்கிய அனைத்து தமிழர்களும் தடுத்து வைக்கப்பட்டனர். மிகவும் இரகசியமான இராணுவ தளம் என்பதால், அங்கு தடுத்து வைக்கப்பட்ட தமிழர்கள் அவர்களுக்கென்று அமைக்கப்பட்ட தடுப்பு பகுதியிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

முற்கம்பி வேலியிட்டு அமைக்கப்பட்டிருந்த தடுப்பு முகாமிலேயே அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்களின் தங்குமிடங்களில் எலிகளின் நடமாட்டமும் அதிகமாக இருந்ததால் சுகாதார நெருக்கடிகளும் தோன்றியிருந்தன.

நீதிமன்ற தீர்ப்பை அடுத்து அங்கு தங்கியிருந்த பெரும்பாலானவர்கள் பிரித்தானிய பெருநிலப் பரப்பிற்கு இந்த மாதத்தின் முற்பகுதியில் அழைத்துச்செல்லப்பட்டனர்.

எனினும் இந்த தீர்ப்பும் அவர்கள் பிரித்தானிய பெருநிலப் பரப்பிற்கு கொண்டுவரப்பட்ட சம்பவமும் தனித்துவமான ஒன்று, இதை எதிர்காலத்தில் ஒரு முன்னுதாரணமாகக் காட்ட முடியாது எனவும் பிரித்தானிய அரசு திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியுள்ளது. அவர்கள் வழக்கு அசாதாரணமானது என்றும் ஒரே ஒரு முறை மாத்திரமே கவனத்தில் எடுக்கக் கூடியது என்றும் பிரித்தானிய அரசு அறிவித்திருந்தது.

இவர்களின் வழக்கு மிகவும் சிக்கல் மிகுந்ததாக இருந்தது. இதை பிரித்தானிய நீதிமன்றம் விசாரிப்பதா அல்லது இந்தியப் பெருங்கடலில் உள்ள பிரித்தானிய பிரதேசங்களுக்கான நீதிமன்ற விசாரிப்பதா என்ற சர்ச்சை எழுந்தது. பின்னர் அந்த பெருங்கடல் பகுதியில் இருக்கும் பிரதேசங்களுக்கான உச்சநீதிமன்றம் வழக்கை விசாரித்தது.

பின்னர் தீர்ப்பளித்த நீதிபதி மார்கரெட் ஓபி அம்மையார், தஞ்சக் கோரிக்கையாளர்களை அந்தத் தீவில் பிரித்தானியா தடுத்து வைத்திருந்தது சட்டவிரோதமானது என தீர்ப்பளித்தார். தமிழர்கள் அங்கு தடுத்து வைக்கப்படவில்லை என்ற பிரித்தானிய அரசின் வாதத்தை நீதிபதி ஓபி நிராகரித்தார். அது எவ்விதத்திலும் “கருத்தில் எடுக்க முடியாதது” என அவர் கூறிவிட்டார்.

அவர்கள் சிறை வைக்கப்படவில்லை என பிரித்தானிய அரசு கூறியது. ஆனால் அவர்கள் தடுத்து வைக்கப்பட்ட இடத்தை சிறை என பெயரிட முடியாது என்றாலும், அவர்கள் முள்வேலியிடப்பட்ட இராணுவ கூடாரங்களில் அடைக்கப்பட்டிருந்தது சிறை போன்ற சூழலே என நீதிபதி தீர்ப்பளித்தார்.

“உண்மைகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலும், சட்டத்தின் பார்வையிலும், அவர்கள் டியாகோ கார்சியாவை அடைந்த சமயத்திலிருந்து அங்கு தடுத்து வைக்கப்பட்டார்கள் என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். 16 சிறுவர்கள் உட்பட 61 பேரும் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டார்கள்” என தனது தீர்ப்பின் இறுதியில் நீதிபதி மார்கரெட் ஓபி கூறினார்.

இந்தத் தீர்ப்பை அடுத்து, அவர்கள் ‘நரகம் போன்ற சூழலில்” தங்க வைக்கப்பட்டதற்காக, அந்த தஞ்சக் கோரிக்கயாளர்களுக்கு பெருந் தொகையான இழப்பீடு அளிக்க வேண்டிய சூழல் ஏற்படலாம் போன்ற கருத்துக்கள் எழுந்துள்ளன.

அப்படி இழப்பீடு அளிக்கப்பட்டால் அது பல மில்லியன் பவுண்ட்ஸ்களுக்கு மேலாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகளை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த தீர்ப்பு நீதிக்கான மிகப்பெரிய வெற்றி என சட்டத்தரணிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அந்தத் தீவில் தங்கியிருந்தவர்கள் கூட்டுத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்ற வாதத்தை நீதிபதி ஏற்றுக்கொண்டார். தாங்கள் ஒவ்வொரு நாளும் அங்கு “மெல்ல மெல்ல மரணத்தை எதிர்கொண்டோம்” என அளித்த சாட்சியத்தையும் நீதிபதி ஏற்றுக்கொண்டார். மேலும் “சிறைவாசம் எவ்வளவு காலம் என தெரியாமலேயே தாங்கள் அங்கு தங்கவைக்கப்பட்டிருந்தோம்“ என்று அவர்கள் தெரிவித்ததையும் நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

“மூன்று ஆண்டுகளாக நாங்கள் சிறைப்பறவை போன்று இருந்தோம். எமது வாழ்க்கை எமது கைகளில் இல்லை. உட்கார் என்றால் உட்கார வேண்டும், எழுந்திரு என்று சொன்னால் எழுந்திருக்க வேண்டும் என்ற நிலையில் தான் நாங்கள் வைக்கப்பட்டிருந்தோம்” என அந்த தஞ்சக் கோரிக்கையாளர்கள் கூறினர். அதையும் நீதிபதி ஏற்றார்.

பிரித்தானியாவில் முன்னர் இருந்த கன்சர்வேடிவ் கட்சியின் ஆட்சிக் காலத்தில் “ருவண்டா கொள்கை”என்ற அடிப்படையில், பிரித்தானியாவில் அகதி தஞ்சம் கோருபவர்களை, பாதுகாப்பு அளிக்கும் நோக்கில் ஆபிரிக்க நாடான ருவண்டாவிற்கு அனுப்பும் கொள்கையிலிருந்த பிரச்சினைகள் காரணமாக அவர்களது கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவது தாமதமானது எனவும் நீதிபதி கண்டறிந்தார். தமது தீர்ப்பில் நீதிபதி மார்கரெட் ஓபி அம்மையார் அந்த அகதிகள் அந்த முகாமில் சொல்லொணா துன்பங்களுக்கு ஆளாயினர் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தீர்ப்பைக் கவனமாக பரிசீலித்து வருவதாகக் கூறியுள்ள பிரித்தானிய அரசின் பேச்சாளர் ஒருவர், “டியாகோ கார்சியா நீண்டகால அடிப்படையில் குடியேறிகளை தங்கவைக்க உகந்த இடமாக இருந்ததில்லை எனவும், இப்போது அவர்களில் பெரும்பாலானவர்கள் பிரித்தானிய பெருநிலப் பரப்பிற்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களில் கவனம் செலுத்தப்படுகிறது” எனவும் தெரிவித்தார். ■

# புத்தளம் நகர் வாழ் பெற்றோருக்கு ஜம்இயத்துல் உலமாவின் அறிவிப்பு

(எம்.யூ.எம்.சனூன்)

அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா புத்தளம் நகர கிளையினால் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர் களுக்கான விசேட அறிவுறுத்தலொன்றை விடுத்துள்ளது.

பாடசாலை மற்றும் தனியார் வகுப்புகள் மூலம் தமது கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட மாணவர்கட்கு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இப்பிரதேசத்தின் பெருந்தொகையான மாணவர்கள் விடுமுறை காலத்திலும் பாடசாலை மேலதிக வகுப்புக்கள், தனியார் பிரத்தியேக வகுப்புகளில் இடைவிடாது கலந்து கொள்கின்றனர். இதனால் மாணவர்கள் மத்தியில் மன அழுத்த நிலைகள் அதிகரித்து உள ஆரோக்கியம் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் இனங்காண ப்பட்டுள்ளதாக துறைசார் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே புத்தளம் பிரதேசத்தின் உடல், உள ஆரோக்கியமான சந்ததியினரின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு கடந்த வருடம் போன்று இம்முறையும் 2024 டிசம்பர் 25ம் திகதி முதல் 2025 ஜனவரி 01ம் திகதி வரை புத்தளம் பிரதேசத்தில் உள்ள அனைத்து பாடசாலை மேலதிக வகுப்புக்கள், தனியார், பிரத்தியேக வகுப்புக்கள், வீடுகளில் நடைபெறும் சிறிய அளவிலான வகுப்புகளுக்கு முழுமையான விடுமுறை வழங்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம். எனவே இக்காலப் பகுதியில் மாணவர்கள் விரும்பும் விளையாட்டுக்கள், சுற்றுலா, சந்தோசமான நிகழ்வுகளில் மாணவர்களை ஈடுபடுத்துமாறும், குடும்பங்களுக்கிடையிலான உறவுகளை பலப்படுத்திக்கொள்ள சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுக்குமாறும், இஸ்லாத்துக்கு முரணான விடயங்களில் இருந்து மாணவர்களின் விடுமுறை காலத்தை பாதுகாத்துக் கொள்ளுமாறும் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குகிறோம்.

கடந்த காலங்களில் இவ்வேலைத்திட்டத்தில் முழுமையாக ஒத்துழைத்த அனைத்து கல்வியியலாளர்கள், நிறுவனங்களின் பொறுப்பாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம் என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் நகரக் கிளை தெரிவித்துள்ளது.

# கடந்த 24 மணி நேரத்தில் வீதி விபத்துகளில் எண்மர் பலி

(க.மகாதேவன்)



கடந்த 24 மணி நேரத்தில் பல பகுதிகளில் நடந்த வீதி விபத்துகளில் இரு இளைஞர்கள் உட்பட 8 பேர் உயிரிழந் துள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (21) மாரவில, அம்பலாந்தோட்டை, கம்பளை, ஹெட்டிபொல, மட்டக்களப்பு, மிரிஹான, கெப்பத்திகொல்லாவ மற்றும் சீதுவ ஆகிய பொலிஸ் பிரிவுகளில் விபத்துகள் இடம்பெற்றுள்ளன. பேலியகொட புத்தளம் வீதியில் மாரவில நகரில் கொழும்பு நோக்கி பயணித்த பஸ்ஸ/டன் முன்னால் வந்த முச்சக்கரவண்டி ஒன்று நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.ஆனமடுவ, திவுல்வெவ பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

# ‘புத்தளம் தள வைத்தியசாலை பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும்’

(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் நகரத்தில் நீண்ட காலமாக தீர்வு காணப்படாத பிரச்சினைகள் குறித்து புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம். பைசலுடன் சினேக பூர்வமான சந்திப்பொன்று (19) புத்தளம் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கிடையில் புத்தளம் நகரில் இடம்பெற்றது.

தான் பதவியேற்றதில் இருந்து தான் முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகள் சிலவற்றை பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு விளக்கம் அளித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் விளக்கமளிக்கையில்,

சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸவுடன் புத்தளம் தள வைத்தியசாலை தரமுயர்த்தப்பட வேண்டும் என்று பரிந்துரைத்ததுடன் அமைச்சர் கூடிய விரைவில் புத்தளம் தள வைத்தியசாலைக்கு விஜயம் செய்து உரியவைகளை செய்து தருவதாக வாக்குறுதி அளித்துள்ளார். வெள்ளப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு காண்பதற்கு செய்ய வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் துரிதப்படுத்த முயற்சிகள் இடம் பெற்றுள்ளது. பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரினி அமரசூரியவுடன் புத்தளம் கல்வித்துறையில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

தான் பதவியில் இருக்கப் போகும் காலத்தில் புத்தளம் தொகுதியில் தன்னால் இயன்ற அளவு முழுமையான சேவையை வழங்க உழைப்பதற்கு தயாராக இருப்பதாக கூறியதுடன் புத்தளம் நகரின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளில் காணப்படும் அனைத்து வகையான அபிவிருத்தி தேவைப்பாடுகளை இனம்கண்டு தனக்கு அறியத்தருமாறும் புத்தளம் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களிடம் நாடளுமன்ற உறுப்பினர் இதன் போது தெரிவித்தார்.

# மாத்திரைகளுடன் இளைஞன் கைது



(எம்.ரீ.ஆரிப்)

மதவாச்சி இசின்பெஸ்ஸகல பகுதியில் பொலிஸ் அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் போதை மாத்திரைகளை தம்வசம் வைத்திருந்த இளைஞன் ஒருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞனிடமிருந்து 20 கும் அதிகமான போதை மாத்திரைகளை விஷேட அதிரடிப்படையின் செட்டிகுளம் முகாம் உத்தியோகத்தர்கள் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞன் 19 வயதுடைய மதவாச்சி பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காக மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# மஸ்ஜிதுல் றஹ்மான் பாலர் பாடசாலையின் கலை விழா







(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி ஆபத்தொழி மஸ்ஜிதுல் றஹ்மான் பாலர் பாடசாலையின் பத்தாவது வருடாந்த கலை விழா நிகழ்வுகள் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பாலர் பாடசாலையின் தலைவர் எம்.ஏ.எம் இக்மால் தலைமையில் இடம்பெற்றது இந் நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி நகரின் ஏனைய பாலர் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர். பாலர் பாடசாலை மாணவர்களின் இஸ்லாமிய மற்றும் கலை ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் மஸ்ஜிதுல் றஹ்மான் பாலர் பாடசாலை ஆசிரியர்களான எம்.எஸ் சஜானஸ், எம்.ஐ.எப் சஹானா மற்றும் எம்.எஸ் றிப்னத் ஆகியோரின் முயற்சியினால் பெற்றோர்களின் பங்களிப்புடன் சிறப்பாக இடம்பெற்றதுடன் பங்கு பற்றிய சகல மாணவர்களுங்கும் பரிசுப் பொருட்கள், சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# உடப்பூர் பெ.வீரசுந்தரேஸ்வரனின் இரண்டு நூல்களின் வெளியீடு









(க.மகாதேவன்)

கவிஞரும்,எழுத்தாளருமான கலாதினி விருது பெற்ற உடப்பூர் பெ.வீரசுந்தரேஸ்வரன் எழுதிய “உடப்பூரின் சித்திரைச் செவ்வாய்” “வீராவின் மரபுக் கவிதை “ ஆகிய இரண்டு நூல்களின் வெளியீடு உடப்பு இந்து கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (20) நடைபெற்றது. இதன் போது இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.சின்னராசா , ஓய்வு பெற்ற ஆசிரியர் க.மகாதேவன் மற்றும் கலைஞர்களும், அதிபர்கள்,ஆசிரியர்கள்,மற்றும் கிராம அலுவலர்கள்,ஓய்வு பெற்ற அதிபர்கள் ஆசிரியர்கள் போன்றோர் கலந்து சிறப்பித்தனர். நூலின் முதற்பிரதியை உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பலர் நூலின் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். உடப்பூரின் சித்திரைச் செவ்வாய் நூலின் ஆய்வுரையை உடப்பு தமிழ் மகா வித்தியாலய அதிபர் பூ.சுகந்தன் நடத்தினார்.

அத்துடன் வீராவின் மரபுக் கவிதை நூலின் ஆய்வுரையை கலாபூஷணம் வை.இராமச்சந்திரன் நடத்தினார்.

இதன்போது ஓய்வு நிலை அதிபர் வி.நடராஜா, முன்னாள் அதிபர் மு.சொக்கலிங்கசாமி ஆகியோர் வாழ்த்துரை, தலைமை உரைகளை ஆயாற்றினார்கள்.

# ‘ஒரு இலட்சம் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை’

(முகம்மட் முக்தார்)

நாடளாவிய ரீதியில் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர். ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்த பதவி உயர்வுகள் தொடர்பாக கல்வியமைச்சு எவ்வித நடவடிக்கையினையும் கடந்த 2023 ம் ஆண்டிலிருந்து எடுக்காமை காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவையில் நிபந்தனைகள் எதுவுமின்றி 21.10.2022 ம் திகதிவரை ஆசிரியர்களுக்கானபதவி உயர்வுகளை வழங்குவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு கல்வி அமைச்சிற்கு அனுமதி வழங்கியது.

இந்த தினத்திற்கு பின்னர் இலங்கை ஆசிரியர் சேவையில் மொடியூல் பயிற்சிகளை முடித்து சித்திபெறும் ஆசிரியர்களுக்கு மட்டும் 21.10.2022 ம் திகதிக்கு பின்னர் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டமை காரணமாகவே இவ்வாறான தேக்கநிலை ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகளை வழங்குவதற்கு தேவையற்ற நிபந்தனைகளை விதிப்பதை விடுத்து தன்னியக்க பதவி உயர்வுகளை வழங்குமாறு கல்வியமைச்சிடம் தொடர்கோரிக்கைகளை நாம் முன்வைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கை ஆசிரியர் சேவையில் தரம்2-11 இல் இருந்து 2-1 க்கும் 2-1 இலிருந்து வகுப்பு -1 க்கும் பதவி உயர்வு கடந்த இரண்டு வருடங்களாக வழங்கப்படாமல் ஒரு இலட்சத்திற்கு அதிகமான ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக திரு.ஸ்டாலின் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இலங்கை ஆசிரியர் சேவையில் 280,000 க்கு அதிகமானோர் கடமையாற்றுகின்றனர்.இவர்களுள் சுமார் 2,20000 பேர் பெண்கள் ஆவர். இவர்கள் 365 தேசிய பாடசாலைகளிலும் 9700 மாகாணப் பாடசாலைகளிலும் கடமையாற்றி வருகின்றனர்.

# அத்தனகல்லை அந்நூரின் பரிசளிப்பு




(ஏ.எச்ஹஸ்பர்)

அத்தனகல்லை அந்நூர் பாலர்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (21) அத்தனகல்லை பதிஹ் கலாசார நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு அத்தனகல்லை ஜும்ஆப் பள்ளிவாயல் நிர்வாக சபையின் தலைவர் எம்.என்.எம். அன்வர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தொழிலதிபர் எம்.எப். என்.முன்சிரும் சிறப்பு அதிதிகளாக மனித உரிமைகள் (Global mission) நிறுவனத்தின் பணிப்பாளர் ரஸ்மியா சமத் மற்றும் வர்த்தகர் சிராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.நிகழ்வில் அந்நூர் பாலர் பாடசாலையின் மாணவர்களின் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப் பட்டன.

# ஆதவன் முன்பள்ளி பாலரின் நத்தார் தின நிகழ்வு



(மகாதேவன்)

ஆண்டிமுனையில் அமைந்துள்ள ஆதவன் முன்பள்ளி பாலர் பாடசாலையில் நத்தார் தின நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (20) நடைபெற்றது. பாலர் பாடசாலையின் ஆசிரியை வே.கிருஷ்ண காந்தியின் நெறியாள்கையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. மாணவர்கள் நத்தார் தாத்தா வேடம் தரித்து இதன் போது காணப்பட்டனர்.

# தென் மாகாண கல்வித் திணைக்கள பரிசளிப்பு விழா

(வெலிகம நிருபர்)



தென் மாகாண கல்வித் திணைக் களத்தினால் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் பரிசளிப்பு விழா அண்மையில் மாத்தறை நூபே ஸனஸ மண்டபத்தில் நடைபெற்றது. தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேக் எம். ஏ.எம். மஷாஹிர் (நளீமி) தலைமையில் நடை பெற்ற இவ் விழாவில் 800 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் தென் மாகாண கல்விச் செயலாளர் ரஞ்சித் யாப்பா, தென் மாகாண கல்விப் பணிப்பாளர் உபுல் சன்ன வீரசேகர,மாத்தறை வலய கல்விப் பணிப்பாளர் ஒமனி முதலிகே, முலட்டியன வலய கல்விப் பணிப்பாளர் எம்.டி.எம். ஆகில் கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவு பணிப்பாளர் மேஜர் நஸ்முத்தீன் உட்பட கல்வி அதிகாரிகள், பாடசாலை அதபர்கள், முன்னாள் கல்வி அதிகாரிகள், முன்னாள் அதிபர்கள் மற்றும் மாணவர்கள் என பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்தனர்.

# பெருமையை நிராகரித்த நேர்மையான அரசியல்வாதி மர்ஹூம் நஜீப்.ஏ.மஜீத்



எம். ஐ. அஹமத் கபீர்

முதல் முஸ்லிம் முதலமைச்சர் என்ற பெயருடன் அரசியலில் மிளிர்ந்தவர் மர்ஹூம் நஜீப் ஏ. மஜீத் ஆவார்கள் – அன்னாரை இழந்து இன்றுடன் (23) ஒரு வருடம் பூர்த்தியாகிறது.

சமகால அரசியலில் முஸ்லிம் சமூகம் இழந்த பெரும் ஆளுமை அவராவார். இத்தருணத்தில் பலத்த எதிர்பார்ப்புக்களுடன் அவரது இடைவெளியும் நினைவுகூரப்பட வேண்டும்.

தனித்துவ, அடையாள, உரிமை என பிரிக்கும் அரசியல் எல்லாம் புறந்தள்ளப்படும் இன்றைய நிலையில நஜீப்பின் இழப்பு மிகப்பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. 1957.01.01 இல் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவில் பிறந்த இவர், தனது முப்பதாவது வயதில் அரசியலுக்குள் நுழைந்தார். அவரின் கன்னி அரசியல் முயற்சி தோற்றாலும், இரண்டாவது பிரயத்தனத்தில் கிண்ணியா நகர சபையின் தவிசாளராக 1994 காலப்பகுதியில் தெரிவானார் – தந்தையான அப்துல் மஜீதின் மறைவு இவருக்கு இப்பொறுப்பை வழங்கியது எனலாம். கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளராக ஆரம்பமான மர்ஹூம் நஜீப், ஏ.மஜீதின் அரசியல் பயணம் அரசியலின் உச்சம் வரை உயர்ந்தது.

மக்களுக்குப் பணியாற்றுவதில் இவருக்கு பதவிகள் ஒரு பொருட்டாக இருந்ததில்லை. இயல்பாக இவரிடமிருந்த இறைபக்தி, இங்கிதம் மற்றும் இனிமையான போக்குகள் நஜீப்பின் அரசியலுக்கு அடித்தளமிட்டன. அரசியலின் உச்சத்திலான பதவியில் இருந்தபோதும் பொறுமையைப் பேணி, பெருமையை நிராகரித்து நடந்து கொண்டார். அரசியல் பயணத்தில் சில தோல்விகளைச் சந்திக்க நேர்ந்தாலும், சிந்தித்து நடந்து கொண்டவர், மக்களுக்கான கடமைகளில் எதைத் தவறவிட்டோம் என்ற எண்ணத்திலேயே, இவரது அரசியற் செயற்பாடுகள் அமைந்திருந்தன.



தனிப்பட்ட வாழ்விலும் தனக்கென்று ஒரு பக்குவத்தை வகுத்துக் கொண்டவர் நஜீப்பின் இதனால், இவருக்கான நேசம் மற்றும் கௌரவம் மதங்கடந்து மற்றும் சமூகங்களைத் தாண்டி செல்வாக்குப் பெற்றிருந்தது எனலாம். முஸ்லிம் தனித்துவ அரசியலுக்கு முகவரி தந்தது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆனால், இதை நிரூபிப்பதற்கான மக்கள் ஆணையை முதன் முதலில் பெற்றவர் நஜீம் ஆவார்கள், கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு கிழக்கு வாழ் சமூகங்களுக்கும் அதிகாரங்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் 2006 இல் உருவாக்கப்பட்டது. ஆனாலும், இரண்டாவது தடவையாக நடத்தப்பட்ட கிழக்கு மாகாண சபைத் தேர்தலில்தான், முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறைவன் இச்சந்தர்ப்பத்தை நஜீப்பிற்கு முதலில் வழங்கினான்.

சமூக அடையாளத்துக்கான பிராந்திய அதிகாரம் (முதலமைச்சர்) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை யில்தான்,பெறப்பட்டதையும் இவ்விடத்தில் பதிவிட வேண்டியுள்ளது.

இரண்டாம் தடவையாக 2012 இல் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. அந்நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்பட்டார். இவரது தலைமையிலான அணியே, அவருக்கு இப்பதவியை வழங்கியது. இருந்தாலும் கட்சி இனம் மற்றும் சமூகம் என்ற குறுகிய வட்டத்தில் சிந்திக்கவோ அல்லது செயற்படவோ நஜீப் விரும்பியிருக்கவில்லை.

கிழக்கில் சம அளவில் மற்றும் சமமான அரசியல் பலத்துடன் வாழ்ந்த தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களையும் ஒரே நோக்குடன் நேசித்த பெருந்தகை இவர் மாகாணத்தின் சகல பிரதேசங்களுக்கும் இவரது சேவைகள் சென்றிருந்தன. தேசிய அரசியலில் பேசப்படும் அளவுக்கு அன்னாரின் நிர்வாகத் திறைமைகள் இருந்தன. அதிகாரங்களைப் பகிரும் அரசின் முயற்சிகள் சமூகங்களிடையே பிளவையோ அல்லது பிரச்சினையையோ ஏற்படுத்தாமலிருக்க வேண்டும். இதில், தெளிவாகவும் மற்றும் உறுதியாகவும் இருந்தன இவரது அரசியல் சித்தாந்தங்கள் மொத்தத்தில், சிறந்த அரசியல்வாதி, ஆத்மீகவாதி, மனித நேயன் இன்னும் சிறந்த பண்பாளன் போன்ற பல பண்புடையவராக மர்ஹூம் நஜீப் ஏ.மஜீத் திகழ்ந்தார் அன்னாரின் மறுவுலக வாழ்வு வெற்றி பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

---

## மாவடிப்பள்ளி வெள்ள அனர்த்தம்:

# சட்ட கடமைகளை நிறைவேற்றாத அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மாவடிப்பள்ளி வெள்ள அனர்த்தத்தில் மரணித்த மத்ரஸா மாணவர்களது விபத்தினை தடுப்பதற்கு முன்னாயத்தம் மற்றும் தங்களது சட்டக்கடமைகளை முறையாக மேற்கொள்ளாத தகுதிவாய்ந்த அரச அதிகாரிகளுக்கு எதிராக முதலாவது வழக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரீ. கருணாகரன் முன்னிலையில் ஆதரிப்பதற்காக அழைக்கப்பட்டது.

மாவடிப்பள்ளியில் இடம்பெற்ற கோர அனர்த்தத்தின் போது தகுதி வாய்ந்த அதிகாரிகள் இவ்வனர்த்தத்தினைத் தடுக்க சட்ட ரீதியான தத்துவமிருந்தும் கருமங்களை மேற்கொள்ளவில்லை என்ற அடிப்படையில் வழக்கு குற்றவியல் நடபடிமுறை கோவையின் பிரிவு 136(1)(அ) பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மரணித்தவரது சார்பாக நீதிமன்றில் முன்னிலையாகிய நிலையில் வழக்கின் முறைப்பாட்டாளர் நீதிமன்றத்தினால் பரீட்சிக்கப்பட்டு அவர்களுடைய சாட்சியம் சட்டத்தரணிகளால் நெறிப்படுத்தப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, பின்னர் நீதிபதி முறைப்பாட்டாளரிடம் பல வினாக்களை வினவினார். பின்னர், தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை கொண்டு நடத்துவது தொடர்பாக ஆராய்ந்து தன்னுடைய கட்டளை ஒன்றை வழங்குவதற்காக 2025.01.17ஆம் திகதி வழக்கு அழைப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கினை விசாரிப்பதற்காக இவ்விடயம் தொடர்பாக மன்றில் முறைப்பாட்டாளர் சார்பாக ஆஜரான அக்கரைப்பற்று சட்டத்தரணி சப்ராஸ் ஷரீபுடன் சட்டத்தரணி குபேந்திரராஜா ஜெகசுதன், சட்டத்தரணி எம்.எம்.எம்.ஏ. சுயாயிர் ஆகியோர் முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜராகி இருந்தனர். குறித்த விடயம் ஒரு பொதுப்பிரச்சினை என்பதாலும், அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கினாலும், சட்டங்களை முறையாக பின்பற்ற தவறியமையினாலும் நிகழ்ந்த ஒரு பாரியதொரு அனர்த்தமென்பதாலும் இந்த வழக்குக்காக சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்தினுடைய சிரேஷ்ட சட்டத்தரணிகள் நஸீல் மற்றும் அன்வர் சியாத், ஷாமிலா உள்ளிட்ட பெரும்பாலான உறுப்பினர்கள் குறித்த வழக்கினை சட்டத்தரணிகளோடு சேர்ந்து வழக்கிற்கு தெரிபட்டு தங்களுடைய பூரண ஆதரவினை வெளிப்படுத்தி இருந்தனர். அந்த அடிப்படையில் ஒரு பொதுப்பிரச்சினை ஒன்றிற்காக இந்த வழக்கிற்கு தெரிபட்ட சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு நன்றிகளை முறைப்பாட்டாளர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இந்த வழக்கினை கொண்டு செல்வதற்கு முழு உறுதுணையாக பயணித்த முறைப்பாட்டாளர், தானாக முன்வந்து இனிமேல் எந்த ஒரு பொது மகனுக்கும் இவ்வாறான அசம்பாவிதங்கள் எதிர்காலத்தில் நடந்து விடக்கூடாது என்ற ஒரு பரந்துபட்ட சிந்தனையோடு நீதிமன்றில் முன்னிலையாகி சட்டத்தரணிகள் மூலமாக விண்ணப்பமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

அரசு அதிகாரிகளின் கவனயீனத்தால் ஏற்பட்ட ஓர் அசம்பாவிதமே இந்த மரணத்துக்கான காரணம் என்று நீதவானுக்கு சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர். ஆகவே, இந்த வழக்கானது முறைப்பாட்டாளர் சார்பாக எந்த விதமான கட்டணங்களும் இன்றி இலவசமாக நடத்தப்படுவதுடன் பொதுமக்களுக்கு அரச அதிகாரிகளினால் இவ்வாறான அசம்பாவிதங்கள் எதிர்காலத்தில் ஏற்பட்டு விடக்கூடாது என்ற ஒரு விழிப்புணர்வாகவும் இந்த வழக்கு அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

# கல்முனை ஹூதா ஜும்ஆ பள்ளிவாசலில் இரத்த தானம்



(நிப்ராஸ் லத்தீப், நூருல் ஹூதா உமர்)

கல்முனை ஹூதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் அதன் தஃவா குழுவின் ஏற்பாட்டில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக நடைபெற்ற இரத்த தான முகாம் சனிக்கிழமை (21) கல்முனை ஹூதா ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிகழும் குருதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக கல்முனை ஹூதா அழைப்பு வழிகாட்டல் பணியகம் ஒவ்வொரு வருடமும் இந்த இரத்ததான முகாம் நடைபெற்று வருகிறது.

இன்றைய நிகழ்வில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஸாரா ஷராப்தீன், கல்முனை பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எம்.ரம்சீன் பக்கீர், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்தியர் குழாம், தாதிகள், உத்தியோகத்தர்கள், கிராம நிலதாரி, கல்முனை ஹூதா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகிகள் எனப்பலரும் கொண்டனர்.

---

# அட்டாளைச்சேனையில் காரியாலய உபகரணங்கள் வழங்கி வைப்பு




(றியாஸ் ஆதம்)

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மிகவும் அவசியத் தேவையாக காணப்பட்ட. தொலைநகல் இயந்திரம் மற்றும் பிரதி எடுக்கும் இயந்திரம் உட்பட தளபாடங்களும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு நேற்று (21) விஜயம் செய்த கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் மேற்குறித்த பொருட்களை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.இஸ்ஸடீனிடம் கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்களையும் சந்தித்து கலந்துரையாடிய பணிப்பாளர், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டதுடன் பொதுமக்கள் திருப்தி கொள்ளும் வகையில் நேர்த்தியாகவும் தரம் மிக்கதாகவும் சேவைகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையினை வழங்கும் பொருட்டு பிராந்திய சுகாதார நிறுவனங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள தேவைகள், பிரச்சினைகளை கேட்டறிந்துவரும் பிராந்திய பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன் அவர்கள் அவற்றில் முடியுமானவற்றை உடன் நிவர்த்தி செய்து தீர்வினையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

## கல்முனை நீர்ப்பாசன திணைக்களத்துக்கு

# “இயந்திர வேலைத்தளம் அமைத்துத்தர வேண்டும்”

(முகம்மட் முக்தார்)

கல்முனை பிரதேசத்திற்கென தனியான நீர்ப்பாசன திணைக்கள இயந்திர வேலைத்தளமொன்றை அமைத்துத்தர வேண்டுமென கல்முனை கரையோரப்பிரதேச விவசாய அமைப்புக்கள் நீர்ப்பாசன அமைச்சிடமும் பிரதேச அரசியல்வாதிகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளன.

கல்முனை கரையோரப் பிரதேசத்தில் கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, திருக்கோவில், பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயங்கள் இயங்குகின்றன.

அம்பாறை மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் பிரிவுக்கான இயந்திர வேலைத்தளம் அம்பாறையில் அமைந்துள்ளது. கல்முனை கரையோர பிரதேசங்களில் நீர்ப்பாசன அணைக்கட்டுக்கள் அமைத்தல், திருத்துதல் ஆறுகள், குளங்கள் தூர்வாருதல் போன்ற வேலைகளை செய்வதற்கு அம்பாறையில் இருந்து இயந்திராதிகளை கொண்டுவர வேண்டியுள்ளது. அம்பாறை பிரதேச நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளரின் தேவையை பொறுத்து அவர்களுக்கு அவசியமில்லாத வேளைகளில் மட்டுமே இயந்திராதிகள் கரையோரப் பிரதேசங்களுக்கு விடுவிக்கப்படுகின்றன. ஆகக்குறைந்தது கரையோர பிரதேச ஆறுகளிலுள்ள ஆற்று வாழைகளைக் கூட அகற்ற முடியாத நிலையில் கரையோர பிரதேசங்களிலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள் காணப்படுகின்றன.

வெள்ளம் ஏற்பட்ட பின் ஆறுகளில், வயல் நிலங்களில் மலை போல் குவியும் ஆற்று மண்ணைக்கூட அகற்ற முடியாத நிலையில் கல்முனை கரையோரப் பிரதேச நீர்ப்பாசன அலுவலகங்கள் காணப்படுகின்றன. கரைவாகுப்பற்று பள்ளாறை தோண்டுவதற்காக உலக வங்கியின் உதவித்திட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சர் பேரியல் அஸ்ரபினால் கொண்டுவரப்பட்ட நீரில் மிதக்கும் பெக்கோ இயந்திரம் கூட இவ்வாறான இயந்திராதி சாலை இல்லாத காரணத்தினால் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஸவினால் எடுத்துச் செல்லப்பட்டது. கல்முனைக்கென தனியான நீர்ப்பாசன திணைக்கள இயந்திர சாலை இருந்திருந்தால் இவ்வியந்திரம் கொண்டு செல்லப்பட்டிருக்காது என விவசாய அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

---

# வருடாந்த பரிசளிப்பு விழா



(ஆரையம்பதி நிருபர்)

ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கு சக்தி பாலர் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் செல்வாநகர் கிழக்கு சிவா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சக்தி பாலர் பாடசாலை அதிபர் புஸ்பலதா குகாநிதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மண்முனைப்பற்றுப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தேவசிங்கன் திலக்ஷன் பிரதம விருந்தினராகவும், மட்டக்களப்பு கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் அனுரேகா விவேகானந்தன் கௌரவ விருந்தினராகவும், செல்வாநகர் கிழக்கு சிவா வித்தியாலய அதிபர் சுமதி பத்மநாதன் மற்றும் செல்வாநகர் கிழக்கு கிராமசேவை உத்தியோகத்தர் எஸ்.நிரோசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். நிகழ்வின் ஆரம்பத்தில் சிறார்களால் நிகழ்விற்கு வருகைதந்த அதிதிகளுக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், நிகழ்வும் அதிதிகளின் உரைகள் இடம்பெற்றன.

---

# வீதிகளுக்கு ஒளியூட்டும் வேலைத்திட்டம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மீராவோடை மேற்கு பகுதிக்குட்பட்ட வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த பகுதியில் மின் கம்பங்களில் பொருத்தப்பட்டிருந்த மின் இணைப்புக்கள் சேதமடைந்து, மின்குமிழ்கள் பழுதடைந்து காணப்பட்டன.

இதனைக் கருத்திற் கொண்ட சமூக செயற்பாட்டாளரும் மொடர்ன் நிறுவன உரிமையாளருமான ஐ.எம்.றிஸ்வின் தனது சொந்த நிதியிலிருந்து இருளடைந்த வீதிகளுக்கு ஒளியூட்டும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தார். ஓட்டமாவடி பிரதேச சபையின் உதவியுடன் இந்த வேலைத்திட்டத்தை மேற்கொண்ட சமூக செயற்பாட்டாளர் ஐ.எம்.றிஸ்வினின் செயற்பாட்டிற்கு பிரதேச மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

# நோய்க் காவிகளாக மாறும் ஆபிரிக்க நத்தைகள்

## சூழலியலாளர் ஐங்கரநேசன் எச்சரிக்கை

▮ பு.கஜிந்தன்

ஆபிரிக்க நத்தைகளின் பெருக்கத்தால் பயிர் பச்சைகளையெல்லாம் தின்றுதீர்ப்பதோடு, உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு நோய்களைப் பரப்பும் காவிகளாகவும் செயற்படுகின்றன என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட இந்த பெரும் நத்தைகள் சமீபத்தில் பெய்த பெருமழையின் பின்னர் பல பகுதிகளில் படையெடுக்க ஆரம்பித்துள்ளன.

இவற்றை இப்போதே கட்டுப்படுத்தத் தவறின் விரைவில் பேராபத்துகளை விளைவிப்பவையாக இவை அமையும் என்றார்.

ஆபிரிக்க நத்தைகள் தொடர்பாக நேற்று (22) பொ.ஐங்கரநேசன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் (African Giant Snail- Lissachtina fulica) பிரித்தானியர் ஒருவரால் பின்விபரீதங்கள் புரியாமல் இலங்கைக்குள் எடுத்துவரப்பட்ட ஓர் அந்நிய இனம். ஒரு நத்தையிலேயே ஆண், பெண் இனப்பெருக்க அமைப்புகள் இரண்டும் இருப்பதால் இரண்டு நத்தைகள் சோடி சேரும்போது இரண்டுமே முட்டைகளை உருவாக்குகின்றன.

சராசரியாக 5 தொடங்கி 6 ஆண்டுகள் வரை வாழுகின்ற ஒரு நத்தை தன் ஆயுளில் 1000க்கும் அதிகமான முட்டைகளை இடுகின்றது. அந்நிய இனமான இவற்றை இரையாக்க இலங்கையின் இயற்கைச் சூழலில் இரைகௌவிகள் எதுவும் இல்லை. இதனால் பல்கிப்பெருகி இப்போது ஓர் ஆக்கிரமிப்பு இனமாக உருவெடுத்துள்ளது.

உலகின் உயிர்ப் பல்வகைமையின் அழிவுக்கு அந்நிய ஊடுருவல் இனங்களும் ஒரு பெருங்காரணமாக உள்ளது.

பகலில் மறைந்திருந்துவிட்டு இரவில் இரைதேடும் ஆபிரிக்க நத்தைகள் பயிர்கள், அலங்காரச் செடிகள், புல்பூண்டுகள் என்று எல்லாவற்றையும் தின்று தீர்த்து வருகின்றன. ஒரு தாவரத்தில் உள்ள நோய்க்கிருமிகளை இன்னொரு தாவரத்துக்குக் காவிச் செல்கின்றன.



இவற்றோடு மனிதர்களில் மூளைமென்சவ்வு அழற்சியை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிப் புழுக்களை இவை காவித்திரிவதும் அறியப்பட்டுள்ளது. ஆபிரிக்க நத்தைகள் பயிர்ச்செய்கைக்கும், உயிர்ப்பல்வகைமைக்கும் அச்சுறுத்தலாக இருப்பதால் இலங்கை அரசாங்கம் இதனை அந்நிய ஊடுருவல் இனமாக அறிவித்துள்ளது.




ஆபிரிக்க நத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் திணைக்களங்களுக்காகக் காத்திராமல் பொது அமைப்புகளும், பொது மக்களும் முன்வரவேண்டும். உப்பு நீர்க்கரைசல் உள்ள பாத்திரம் ஒன்றில் இவற்றை அமிழ்த்துவதன் மூலம் சுலபமாக அழிக்க முடியும். ஆபிரிக்க நத்தைகள் நோய்க்காவிகளாகவும் இருப்பதால் வெறும் கைகளால் நேரடியாகத் தொடாமல் இலைகள், கடதாசிகள் போன்றவற்றால் இவற்றைப் பிடிப்பதே பாதுகாப்பானது.

# யாழில் காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

▮ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி குணரத்தினம் (வயது 67) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

இவர் நான்கு தினங்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவரை நேற்று (22) யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# முல்லைத்தீவு கடற்கரையில் வெடிபொருட்கள் மீட்பு

முல்லைத்தீவு கள்ளப்பாடு கடற்கரை பகுதியில் புதைக்கப்பட்ட நிலையில் வெடிப்பொருள் தொகுதி ஒன்று நேற்று முல்லைத்தீவு பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

கள்ளக்குப்பாடு கடற்கரை பகுதியில் நிலத்தில் புதையுண்ட நிலையில் இந்த வெடிபொருள் பகுதியே மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.14.7kg நிறைகொண்ட வெடி பொருளின் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹாலி-எலயில் பெண்ணின் சடலம் மீட்பு

ஹாலி–எல பகுதியில் நீரோடையில் மிதந்த பெண்ணின் சடலம் ஒன்று நேற்று (22) மீட்கப்பட்டுள்ளதாக கந்தேகெதர பொலிஸார் தெரிவித்துள்ளார்.

உதேனிகம, ஹாலி–எல பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான ஆர்.டி.தம்மிக்க லதா (42) என்பவரின் சடலம் என உயிரிழந்தவரின் கணவர் அடையாளம் காட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் பல்வேறான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 18ஆம் திகதி காலை அவர் வீட்டிலிருந்து வெளியேறிய நிலையில் வீடு திரும்பவில்லையெனக் கணவர் கந்தேகெதர பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஹாலி–எல பகுதியில் நீரோடை ஒன்றில் பெண்ணின் சடலம் மிதப்பதாகக் கிடைத்த தகவலின் பேரில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

# இராணுவ முகாமால் குடிநீருக்கு அவதிப்படும் பூநகரி அரசபுரம் மக்கள்



▮ ஜதுர்சிகா

கிளிநொச்சி பூநகரி அரசபுரம் மக்களுக்கு ஒரு நாளைக்கு இருபது லீட்டர் குடிநீர் மட்டுமே இராணுவத்தால் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கிராமத்தில் 2006ம் ஆண்டு காலப்பகுதியில் உலக தரிசனம் நிறுவனத்தினால் அப்பகுதி மக்களின் குடிநீர் தேவைக்கென கட்டி வழங்கப்பட்ட பொது குடிநீர் கிணறு இராணுவத்தினால் அதன் கட்டுப்பாட்டு எல்லைக்குள் அடைக்கப்பட்டுள்ளது.

இதனால் தினமும் மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை மக்கள் இராணுவ முகாமின் வாசலில் நீர் கொள்கலன்களை அடுக்கி வரிசையாக நின்று நீரினை பெறுதல் வேண்டும்.

இந்த மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பள்ளிக்குடா கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள அரசபுரம் கிராமத்தில் ஆறு குடும்பங்களுக்கு சொந்தமான 12 ஏக்கர் காணி இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு அப்பகுதி மக்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு குடிநீர் கிணறு இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதனால் அப்பகுதி மக்கள் குடிநீருக்கு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

# மின்கம்பத்தில் குளவிக்கூடு

▮ ராமு தனராஜா

பதுளை மஹியங்கனை பிரதான வீதியில் பதுளை பிஹிலகடை சந்தியில் உள்ள மின்கம்பம் ஒன்றில் பாரிய குளவி கூடு ஒன்று காணப்படுவதால் குறித்த குளவி கூட்டை அகற்றித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



குறித்த வீதியின் ஊடாகவே பதுளையில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றிற்கு மாணவர்கள் செல்வதாகவும் அவ்விடத்தில் முச்சக்கர வண்டி தரிப்பிடம் ஒன்றும், புடவை வியாபார நிலையங்களும் ஏனைய வியாபார நிலையங்களும் காணப்படுவதனால் அவ்வியாபார நிலையங்களுக்குச் செல்பவர்கள், மற்றும் அவ்வீதியில் பயணிக்கும் பாதசாரிகள் பாரிய அச்சத்துடனேயே அவ்விடத்தைக் கடந்து செல்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்திக் குறித்த குளவிக் கூட்டை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பேரா. பல்கலையில் தொடர்பாடல் திறன் செயலமர்வு

▮ எம்.ஏ.அமீனுல்லா

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உளவியல் கற்கைகள் துறை மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவின் ஏற்பாட்டில் தலைமைத்துவம் மற்றும் ஆக்கப்பூர்வமான தொடர்பாடல் திறன் அபிவிருத்தி செயலமர்வு இன்று (23) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

" நீங்கள் வளரும் போது என்ன நடைபெறும் "? என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி பேராதனை பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

# வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணிதபாட ஆசிரியர் பற்றாக்குறை

▮ கி.வசந்தன்

வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா தெற்கு வலய செயலாளர் கிருஸ்ணகோபால் வசந்தரூபன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் தற்போதும் பல பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனை ஆசிரியர் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்களின் போது வடக்கு மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதுடன் 2 விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையும் காணப்படுகிறது. அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு 7 ஆசிரிய வெற்றிடங்களும் உள்ளன.

முக்கியமான பாடத்துறைகளில் நிலவும் இவ்வாறான ஆசிரியர் பற்றாக்குறையானது மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தற்போது வட மாகாணத்தில் வழகங்கப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றங்களின் போது இதனை கருத்தில் கொள்ள வேண்டும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

# முதலை கடித்து பெண் மரணம்

வவுனியா, உளுக்குளம் – பாவற்குளம் பகுதியில் முதலை கடித்துப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் 67 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் கால்நடைகளுடன் சென்றபோது கால்வாயில் முதலை கடித்து உயிரிழந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் உளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நானுஓயாவில் கனரக வாகன விபத்து

▮ டி.சந்ரு செ.திவாகரன்

நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் நேற்று முன்தினம் இரவு (21) செங்குத்தான வளைவு ஒன்றில் லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவில் இருந்து ஹற்றன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த லொறில் திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகச் சாரதிக்கு வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் இவ்விபத்து நேர்ந்துள்ளதாகவும் எனினும் லொறியில் பயணித்தவர்கள்



அதிஷ்ட வசமாக சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸ்ரீ அனுமன் ஜெயந்தி லக்ஷார்ச்சனை விழா

இலங்கை சின்மயா மிஷன், இறம்பொடை பக்த ஹனுமான் ஆலய ஸ்ரீ அனுமன் ஜெயந்தி லக்ஷார்ச்சனை விழா கடந்த 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இவ்விழா எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

தினமும் முற்பகல் 9.30 மணிக்கும்,மாலை 4.00 மணிக்கும் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறுவதோடு 29ஆம் திகதி இலட்சார்ச்சனை பூர்த்தியும் காலை 8.30 மணிமுதல் உபசார ஹோமம், தாரா ஹோமம், மகா பூரணாகுதி விசேட பூஜையை தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

30ஆம் திகதி ஸ்ரீ அனுமன் ஜெயந்தி விழா இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் ஸ்ரீவரதராஜ விநாயகர் வழிபாடும் ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்திலிருந்து பாற்குடம் எடுத்துவரப்பட்டு பாலாபிஷேகம், 1008 சங்காபிசேகம் வசந்தமண்டப பூஜை சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா என்பன இடம்பெறும்.




## 43 ஆண்டுகளுக்கு பின்னர் விஜயம்:

# இந்தியப் பிரதமருக்கு குவைத்தின் உயரிய விருது



இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணமாக குவைத்துக்கு சென்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, வளைகுடா நாட்டின் உயரிய விருதான 'தி ஆர்டர் ஆஃப் முபாரக் அல்-கபீர்' (The Order of Mubarak Al Kabeer) விருது நேற்று(22) வழங்கப்பட்டது.

இரு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடி ஆற்றிய பங்களிப்புக்காக குவைத் இந்த கௌரவ விருதினை அவருக்கு வழங்கியது. குவைத்தின் பயான் அரண்மனையில் வைத்து குவைத்தின் அமீர் ஷேக் மெஷல் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல் சபாவிடம் இருந்து பிரதமர் மோடி விருதினை பெற்றார். "தி ஆர்டர் ஆஃப் முபாரக் அல் கபீர்" என்பது குவைத்தின் மாவீரர் பட்டமாகும். இது நாட்டுத் தலைவர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அரச குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு நட்பின் அடையாளமாக இது வழங்கப்படுகிறது. முன்னதாக, பில் கிளிண்டன், இளவரசர் சார்லஸ் மற்றும் ஜார்ஜ் புஷ் போன்ற உலகத் தலைவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. இது குறித்து எக்ஸில் பதிவொன்றை இட்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, குவைத்தின் உயரிய அமீர் ஷேக் மெஷல் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல் சபாஹ் அவர்களால் முபாரக் அல்-கபீர் விருது வழங்கப்பட்டதற்கு நான் பெருமைப்படுகிறேன். இந்த கௌரவத்தை இந்திய மக்களுக்கும் இந்தியாவிற்கும் குவைத்துக்கும் இடையிலான வலுவான நட்புறவுக்காக நான் அர்ப்பணிக்கிறேன் என்றார். கடந்த 1991 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் இந்திராகாந்தி குவைத் சென்றார். இதன் பின் 43 வருடங்களுக்கு பின்னர் குவைத் செல்லும் இந்திய பிரதமர் என்ற பெருமையை மோடி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அசாமில் குழந்தை திருமணத்திற்கு துணைபோன 416 பேர் கைது

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் குழந்தை திருமணத்திற்கு எதிரான மூன்றாவது கட்ட நடவடிக்கையில் 416 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் ஹிமாந்த பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் 335 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் கைதானவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விளைவுகளை முழுவதும் கொண்டுவர நாங்கள் தொடர்ந்து துணிச்சலான நடவடிக்கைகளை எடுப்போம் என முதலமைச்சர் ஹிமாந்த தனது எக்ஸ் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் ஒக்டோபர் மாதங்களில் குழந்தை திருமணத்திற்கு எதிரான இயக்கத்தை மாநில அரசு இரண்டு கட்டங்களாக ஆரம்பித்தது. பெப்ரவரி மாதத்தில் முதற்கட்டமாக 3,483 பேர் கைது செய்யப்பட்டு, 4,515 வழக்குகள் தாக்கல்



செய்யப்பட்ட நிலையில் 915 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் ஒக்டோபர் மாதம் இரண்டாம் கட்டமாக 710 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அசாம் மாநிலத்தில் தாய் மற்றும் குழந்தை இறப்பு விகிதம் அதிகரிப்பதற்கு குழந்தை திருமணமே மிகப்பெரிய காரணம் என மாநில அரசு தெரிவிக்கிறது. அசாமில் சட்டபூர்வ திருமண வயதான 18 வயதுக்கு முன் திருமணம் செய்துகொள்ளும் பெண்களின் எண்ணிக்கை சுமார் 32 சதவீதம் எனவும் தேசிய குடும்ப சுகாதார ஆய்வின் தரவுகளை மேற்கோள்காட்டி தெரிவிக்கப்படுகிறது. இந்த இரண்டு புள்ளிவிபரங்களும் தேசிய சராசரியை விட அதிகம் என தெரிவிக்கப்படுகின்றது. மாநில அரசு அனுமதி வழங்கியதன் பின்னர் அசாம் பொலிஸார், குழந்தை திருமணங்களில் ஈடுபட்டதாகவோ அல்லது நடத்துவதாகவோ குற்றம் சுமத்தப்பட்டவர்களை கைது செய்ய ஆரம்பித்தனர்.

# டில்லி பாடசாலைகளுக்கான தொடர் வெடிகுண்டு மிரட்டல் சம்பவம்

## விசாரணையில் அதிர்ச்சி

டில்லியில் அமைந்துள்ள பல பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பான அண்மைய விசாரணையில் அதிர்ச்சியூட்டும் தகவல் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. டில்லி பொலிஸாரின் சிறப்புப் பிரிவின் குறைந்தது மூன்று பாடசாலைகள் தங்கள் சொந்த மாணவர்களின் எச்சரிக்கையை எதிர்கொண்டதாக டில்லி பொலிஸ் கண்டுபிடித்துள்ளது. கடந்த 11 நாட்களாக




தகவலின்படி, ரோகினி மாவட்டத்தில் உள்ள குறைந்தபட்சம் இரு பாடசாலைகளுக்கு வந்த வெடிகுண்டு மிரட்டல்கள், அதே பாடசாலையில் கல்வி கற்கும் இரு மாணவர்களால் மின்னஞ்சல் மூலமாக விடுக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

மாணவர்கள் பரீட்சைக்கு ஆயத்தம் இல்லாத காரணத்தினால், பரீட்சையை தாமதப்படுத்துமாறு கோரி இந்த மிரட்டலை விடுத்துள்ளமை தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவருக்கும் அறிவுரை வழங்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதாக டில்லி பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை (22) மேலும் தெரிவித்தனர். வெடிகுண்டு மிரட்டல் மின்னஞ்சல்களால் பாதிக்கப்பட்ட போலியான வெடிகுண்டு மிரட்டல்களால் டில்லியில் 100 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் குழப்பத்தில் உள்ளன.

விபிஎன் (VPN) மூலம் மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டதை பொலிஸார் கண்டறிந்துள்ளனர், இதனால் குற்றவாளிகளை கண்டுபிடிப்பது அவர்களுக்கு கடினமாக இருந்துள்ளது. இந்த ஆண்டு மே மாதம் முதல், டில்லியில் உள்ள பாடசாலைகள் மட்டுமல்லாது மருத்துவமனைகள், விமான நிலையங்கள் மற்றும் விமான நிறுவனங்களை குறிவைத்து 50 இற்கும் மேற்பட்ட போலி வெடிகுண்டு மிரட்டல் மின்னஞ்சல்கள் மூலமாக கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## "எனது குடும்பத்தில் 140 கோடி பேர் இருக்கிறார்கள்"

# குவைத் வாழ் இந்திய தொழிலாளர்கள் மத்தியில் மோடி பெருமிதம்

குவைத் சென்றுள்ள இந்திய பிரதமர் மோடி, நேற்று ஞாயிற்றுக்கிழமை அங்குள்ள ஸ்பிக் தொழிலாளர் முகாமுக்குச் சென்று இந்திய தொழிலாளர்களுடன் கலைந்துரையாடினார். அப்போது, நாட்டுக்கு அவர்கள் அளித்து வரும் பங்களிப்பைச் சுட்டிக்காட்டினார்.



தொழிலாளர்களுடன் உரையாடிய பிரதமர் மோடி, "நான் வளர்ச்சி அடைந்த பாரதம் 2047 பற்றி பேசுகிறேன். ஏனென்றால், வேலைக்காக இங்கு வந்துள்ள எனது நாட்டின் தொழிலாளர் சகோதரர்கள், அவர்களுடைய சொந்த கிராமத்தில் எவ்வாறு ஒரு சர்வதேச விமானநிலையத்தை உருவாக்குவது என்று நினைக்கிறார்கள். இந்த சிந்தனை தான் நமது நாட்டின் பலம்.

நமது விவசாயிகள் எவ்வளவு கடினமாக வயல்களிலும், பணியிடங்களிலும் வேலை செய்கிறார்கள் என நான் முழுவதும் நான் யோசித்துக்கொண்டே இருக்கிறேன். அவர்களுடைய கடின உழைப்பு என்னை உத்வேகப்படுத்திக் கொண்டே இருக்கிறது. அவர்களின் கடின உழைப்பை நான் பார்க்கும் போது, அவர்கள் 10 மணி நேரம் வேலை செய்தால் நான் 11 மணி நேரமும், அவர்கள் 11 மணி நேரம் வேலை செய்தால் நான் 12 மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என்று எண்ணிக்கொள்கிறேன்.

நீங்கள் உங்களின் குடும்ப உறுப்பினர்களுக்காக கடினமாக உழைக்கிறீர்கள இல்லையா? நானும் என் குடும்பத்தினருக்காக கடினமாக உழைக்கிறேன். எனது குடும்பத்தில் 140 கோடி பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

அதனால் நான் கொஞ்சம் கூடுதலாக உழைக்க வேண்டும்.

இந்தியாவில் இப்போது மிகவும் மலிவு விலையில் இணைத் தரவுகள் கிடைக்கின்றன. உலகின் எந்த மூலைக்கோ அல்லது இந்தியாவுக்குள்ளேயோ மிகக்குறைந்த செலவில் நாம் இப்போது ஒன்லைனில் பேச முடியும். நீங்கள் வீடியோ அழைப்புகளை பேசினாலும் அதற்கான செலவும் மிகவும் குறைவு. மக்கள் தினமும் அவர்களின் குடும்பத்தினருடன் வீடியோ கோல் மூலம் பேசுவது மிகப்பெரிய வசதியாக உள்ளது." என்றார்.

## 'பகுதிநேர ஆசிரியர்களை பணிநிரந்தரமாக்குக'

# தமிழக முதல்வருக்கு ஆசிரியர்கள் கூட்டமைப்பு கோரிக்கை

பகுதிநேர ஆசிரியர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவது குறித்த அறிவிப்பு ஆளுநர் உரையில் இடம்பெறுவதை முதல்வர் உறுதி செய்ய வேண்டும் என பகுதிநேர ஆசிரியர்கள் கூட்டமைப்பு கோரிக்கை வைத்துள்ளது.



பகுதிநேர ஆசிரியர்கள் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் S.செந்தில்குமார் இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "திமுக தேர்தல் வாக்குறுதி 181-ன்படி பணிநிரந்தரத்திற்கு 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்கள் காத்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டு முதல் 13 ஆண்டுகளாக அரசின் நடுநிலை உயர்நிலை மேல்நிலைப் பாடசாலைகளில் பகுதிநேர ஆசிரியர்களாக 3,700 உடற்கல்வி, 3,700 ஓவியம், 2,000 கணினிஅறிவியல், 1,700 தையல், 300 இசை, 20 தோட்டக்கலை, 60 கட்டிடக்கலை, 200 வாழ்வியல்திறன் என மொத்தம் 12 ஆயிரம் பேர் தற்காலிக அடிப்படையில் பணிபுரிகின்றனர்.

தற்போது வழங்கப்படும் ரூ. 12,500 தொகுப்பு ஊதியத்தை கைவிட்டு, காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டும். பணிநிரந்தரம் ஒன்றே வாழ்வாதாரம், பணிப்பாதுகாப்புக்கு வழி வகுக்கும்" என தெரிவித்துள்ளார்.

# சோளப்பொரிக்கு வெவ்வேறு வரி விதித்தது ஏன்..?

## நிர்மலா சீதாராமன் விளக்கம்

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில், பொருட்கள் மற்றும் சேவைகள் வரி (ஜி.எஸ்.டி) கவுன்சிலின் 55வது கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த கூட்டத்தில், சுவையூட்டப்பட்ட சோளப்பொரி, பழைய கார் விற்பனை வரி உயர்வு உள்ளிட்ட பல முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

உப்பு மற்றும் மசாலாப் பொருட்களுடன் கூடிய சோளப்பொரிக்கு 5 சதவீத ஜி.எஸ்.டி விதிக்கப்படும் என்றும், பேக் செய்யப்பட்ட சோளப்பொரிக்கு 12 சதவீத ஜி.எஸ்.டி வரி விதிக்கப்படும் என்றும் கேரமல் சோளப்பொரிக்கு 18 சதவீதம் வரி விதிக்கப்படும் என்றும் அந்த ஜி.எஸ்.டி. கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.




நாடு முழுவதும் ஒரே வரி விதிப்பை அமுல்படுத்தும் ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு தற்போது அமுலில் இருக்கிறது. நாடு முழுவதும் ஒரே வரி விதிப்பு என்றாலும், ஒவ்வொரு பொருளிலும், இவ்வாறு வேறு வேறாக வகை பிரித்து ஜி.எஸ்.டி. விதிக்கப்படுவது குழப்பங்களை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு மாடி கட்டிடம் இடிந்து விழுந்ததில் இருவர் உயிரிழப்பு

பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் சனிக்கிழமை மாலை 4 மாடி கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் இமாச சலப்பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயது பெண் உட்பட இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கியி ருப்பவர்களை மீட்கும் பணியில், இந்திய இராணுவத்தினரும், தேசிய பேரிடர் மீட்பு படையினரும் 17 மணிநேரங்களுக்கு மேலாக தீவிரமாக முயன்று வருகின்றனர். 60 சதவீத இடிபா டுகள் அகற்றப்பட்டுவிட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முதல்கட்ட விசாரணையில், கட்டிடத்தின் உரிமையாளர்கள் எந்த விதமான முன் அனுமதியும் இல்லாமல் கட்டிடத்தினை கட்டியது கண்டுபிடிக்கப்பட்டது. கட்டிட உரிமையாளர்களான பர்விந்தர் சிங் மற்றும் ககன்தீப் சிங் இருவர் மீதும் பாரதீய நியாய சன்ஹிதா (பிஎன்எஸ்) பிரிவு 105ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# பிரேசிலில் கோர விபத்து; 38 பேர் உயிரிழப்பு



பிரேசில் நாட்டின் மினஸ் கரேஸ் மாகாணத்தில் இருந்து சனிக்கிழமை மாலை செல் போலோ நகர் நோக்கி புறப்பட்ட பயணிகள் பஸ் லொறி மீது மோதி விபத்துக்குள்ளானதில் 38 பேர் உயிரிழந்ததுடன் சிலர் படுகாயமடைந்தனர்.

தியாபிலோ ஒடானி பகுதியில் உள்ள நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸின் டயர் ஒன்று திடீரென வெடித்ததில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த லொறி மீது பஸ் வேகமாக மோதியது. இந்த கோர விபத்தில் 38 பேர் உயிரிழந்ததோடு மேலும் சிலர் படுகாயமடைந்தனர். சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்து சென்று படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். வீதி விபத்தில் 38 பேர் பலியானது குறித்து அறிந்த பிரேசில் ஜனாதிபதி லூலா டா சில்வா, பலியானோர் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்தார். இந்த ஆண்டில் மாத்திரம் வீதி விபத்து தொடர்பான சம்பவங்களில் சுமார் 10,000 பேர் பலியாகியுள்ளனர் என அந்நாட்டு போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.




# பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்;

## 16 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு



பாகிஸ்தானின் பதற்றம் நிறைந்த கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பயங்கரவாதிகள் நடாத்திய தாக்குதலில் 16 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானையொட்டிய தெற்கு வஜிரிஸ்தான் மாவட்டத்திலுள்ள இராணுவச் சாவடியில் பயங்கரவாதிகள் சனிக்கிழமை(20) அதிகாலை தாக்குதல் நடாத்தினர். இதில் 16 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். எட்டு பேர் காயமடைந்தனர். கடந்த சில மாதங்களில் பயங்கரவாதிகள் நடத்திய மிகப் பெரிய தாக்குதல்களில் இதுவும் ஒன்றாகும். இதே மாவட்டத்தில் இரு பயங்கரவாதிகளை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்ற இரண்டு நாட்களில் இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ரஷ்யாவில் உக்ரேன் ட்ரோன் தாக்குதல்



ரஷ்யா நடாத்திய தாக்குதலைத் தொடர்ந்து, அந்த நாட்டின் தொலைதூரத்தில் அமைந்துள்ள நகரில் ட்ரோன்கள் மூலம் உக்ரேன் சனிக்கிழமை(20) தாக்குதல் நடாத்தியது. போர் முனைக்கு சுமார் 1,000 கி.மீ. தொலைவிலுள்ள காஸன் நகரில் உக்ரேன் வீசிய ட்ரோன்கள் குடியிருப்பு அடுக்குமாடி கட்டடங்களைத் தாக்கின. இது குறித்து அந்த நகரம் அமைந்துள்ள டாடர்ஸ்தான் மாகாண ஆளுநர் ருஸ்தம் மினிகானொவ், உக்ரேனின் ட்ரோன்கள் நகரின் ஆறு கட்டடங்களைச் சேதப்படுத்தியதாகத் தெரிவித்தார். இந்தத் தாக்குதலில் உயிர்ச்சேதங்கள் எவையும் ஏற்படவில்லையெனவும் தாக்குதல் காரணமாக காஸன் விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து நிறுத்திவைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நகரில் பொதுமக்கள் கூட்டமாகக் கூடும் நிகழ்ச்சிகள் சனிக்கிழமை முழுவதும் இரத்துசெய்யப்பட்டன.

பாதுகாப்பு கொள்கை காரணமாக, இந்தத் தாக்குதலுக்கு உக்ரேன் அரசு நேரடியாகப் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சொந்த போர் விமானத்தை சுட்டு வீழ்த்திய அமெரிக்கா

செங்கடலில் தனது சொந்த போர் விமானம் ஒன்றை நேற்று (22) அதிகாலை தவறுதலாக சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

நேற்று அதிகாலை சுட்டு வீழ்த்தப்பட்ட F/A-18F போர் விமானத்தில் இருந்த இரு விமானிகளும் சிறு காயங்களுடன் மீட்கப்பட்டதாக அமெரிக்க இராணுவம் உறுதிப்படுத்தியது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க மத்திய கட்டளை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. யேமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்க இராணுவம் வான்வழித் தாக்குதல்களை நடாத்தியதால் இந்த சம்பவம் நிகழ்ந்தது. எனினும், அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளை அந்த நேரத்தில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் விமானிகள் மேற்கொண்ட பணி என்ன என்பதை விபரிக்கவில்லை.

1200 பேரைக் கொன்று 250 பேரை பணயக் கைதிகளாகக் கைப்பற்றிய இஸ்ரேல் மீதான ஹமாஸின் திடீர் தாக்குதலுக்குப் பின்னர் 2023 ஒக்டோபரில் காஸா பகுதியில் இஸ்ரேல்-ஹமாஸ் போர் ஆரம்பித்ததில் இருந்து சுமார் 100 வணிகக் கப்பல்களை ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் ஹவுத்திகள் குறிவைத்துள்ளனர். காசாவில் இஸ்ரேலின் தாக்குதலில் 45,000 இற்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக சுகாதார அதிகாரிகள்



தெரிவித்துள்ளனர். இதனிடையே, காஸாவில் ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலின் போரை நிறுத்துவதற்கு இஸ்ரேல், அமெரிக்கா அல்லது ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றுடன் தொடர்புடைய கப்பல்களை குறிவைப்பதாக ஹவுத்திகள் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் ஹவுத்திகளை குறிவைத்து அமெரிக்கா செங்கடல் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தனது வான்வழித் தாக்குதல்களை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனியில் கார் தாக்குதல்; ஐவர் பலி

ஜேர்மனியின் கிழக்குப் பகுதியில் உள்ள மாக்டேபர்க் (Magdeburg) நகரில் கிறிஸ்துமஸ் சந்தையில் மக்கள்



கூட்டத்தின் மீது கார் மோதியதில் ஒன்பது வயது சிறுவர் மற்றும் நான்கு வயோதிபர்கள் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை (20) மாலை வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலில் குறைந்தது 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் அவர்களில் 41 பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலையடுத்து பொலிஸார், வைத்தியர்கள், தீயணைப்பு வீரர்கள் மற்றும் 50 மீட்புப் பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்ததாக நகர அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சவூதி அரேபியாவைச் சேர்ந்த 50 வயதுடையவர் என்றும் அவர் 2006 ஆம் ஆண்டு முதல் ஜேர்மனியில் வசித்து வருவதாகவும் அருகிலுள்ள நகரமொன்றில் வைத்தியராக பணியாற்றி வருவதாகவும் ஜேர்மன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களின் பின்னணியில் இந்தியா; பங்களாதேஷின் விசாரணைக்குழு தெரிவிப்பு



பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சியின் போது கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களில் இந்தியாவின் தொடர்பு உள்ளதாக பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு கண்டறிந்துள்ளது.

மேலும், 3,500 இற்கும் மேற்பட்ட பங்களாதேஷ் பிரஜைகள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்திருக்கலாம் எனவும் விசாரணைக் குழு மதிப்பிட்டுள்ளதாக பங்களாதேஷ் அரசு நடத்தும் செய்தி நிறுவனமான பி.எஸ்.எஸ். தெரிவித்துள்ளது. பங்களாதேஷின் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி மைனுல் இஸ்லாம் சவுத்ரி தலைமையிலான ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் படி, சில கைதிகள் இன்னும் இந்தியச் சிறைகளில் வாடக்கூடும் என சட்ட அமுலாக்க வட்டாரங்கள் தொடர்ந்தும் கருதுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், இந்தியாவில் தற்போதும் சிறையில் இருக்கும் பங்களாதேஷ் குடிமக்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்குமாறு வெளியுறவு மற்றும் உள்துறை அமைச்சக்களிடம் நாங்கள் பரிந்துரைக்கிறோம். பங்களாதேஷுக்கு வெளியே காணால் ஆக்கப் பட்ட பிரஜைகள் வேறு நாடுகளின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது ஆணையத்தின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்றும் விசாரணை அறிக்கை தெரிவித்துள்ளது. இந்தியாவிற்கும் பங்களாதேஷுக்கும் இடையே சிறைப்பிடிக்கப்பட்ட பரிமாற்றங்கள் மற்றும் கைதிகளின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய புலனாய்வுத் தகவல்களைக் கண்டறிந்ததாக ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. 77 வயதான ஷேக் ஹசீனா, முன்னெப்போதும் இல்லாத வகையில் அரசுக்கு எதிரான போராட்டங்களின் பின்னர், கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி இந்தியாவுக்குத் தப்பிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனி ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும் - எலான் மஸ்க்

உலகம் முழுவதும் கிறிஸ்தவ மத பண்டிகையான கிறிஸ்மஸ் 25ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. இதற்காக கிறிஸ்தவ மதத்தினர் தயாராகி வரும் நிலையில் பண்டிகையையொட்டி ஜேர்மனியில் உள்ள மக்டேபெர்க் நகரில் அமையப்பெற்றுள்ள சந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு குவிந்த மக்கள் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டிருந்தனர்.



அப்போது அங்கு வேகமாக வந்த கார் சந்தைக்குள் புகுந்தது. இதில் சந்தையில் பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்தவர்கள் மீது கார் மோதியது. இந்த கோர சம்பவத்தில் 5பேர் உயிரிழந்தனர். மேலும், 60இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், கார் விபத்தை ஏற்படுத்திய சவுதி அரேபியாவை சேர்ந்த 50 வயதான மருத்துவர் ஒருவரை கைது செய்தனர். இந்நிலையில் உலகப் பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க் தனது எக்ஸ் தள பதிவில் "ஜேர்மன் ஜனாதிபதி ஓலாப் ஷோல்ஸ் உடனடியாக பதவி விலக வேண்டும்" என்று பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காஸா வைத்தியசாலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல்; 8 பேர் உயிரிழப்பு

வடக்கு காஸாவில் உள்ள 2 வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலை மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடாத்தியதில் 8 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேலின் தாக்குதல்களால் பலி எண்ணிக்கை 45 ஆயிரத்தைக் கடந்துள்ளது. 107,573 பேர் காயமடைந்துள்ளனர். காஸாவில் செயல்படும் ஹமால் அத்வான் மருத்துவமனை மீதும் அருகிலுள்ள அல் அவ்தா மருத்துவமனை மீதும் நேற்று தாக்குதல் நடந்துள்ளது. இஸ்ரேலியப் படைகள் வடக்கு காஸா நகரில் உள்ள மற்றொரு பாடசாலை மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில் குறைந்தது 8 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



# புத்தளம் ஐ.எப்.எம். முன் பள்ளியின் இல்ல விளையாட்டு போட்டி

( எம்.யூ.எம்.சனூன் )

புத்தளம் நகரில் தமிழ் மொழி மூலம் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட ஐ.எப்.எம். முன் பள்ளியின் 52வது ஆண்டு நிறைவு மற்றும் அதன் வருடாந்த ”டைனி டொட்ஸ்” இல்ல விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 30 ம் திகதி திங்கட்கிழமை புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அதன் பொறுப்பாசிரியை எம்.எஸ்.பௌசுல் ரூஸி தலைமையில் இடம்பெறவுள்ளது. இல்ல விளையாட்டுப் போட்டியில் ”மா” மற்றும் ”பலா” ஆகிய இரண்டு இல்லங்களைச் சேர்ந்த 25 மழலை சிறார்கள் தமது திறமைகளை மைதானத்தில் வெளிக்கொணர உள்ளார்கள். ”நாம் இல்லையேல் நாளை என்பதும் இல்லை” என்பது இந்த வருட விளையாட்டுப் போட்டியின் தொனிப்பொருளாகும்.

50 மீட்டர் ஓட்டம், பழம் சேகரித்தல், பலூன் உடைத்தல், பூ கோர்த்தல், போத்தலில் நீர் நிறைத்தல், சாக்கு ஓட்டம், கால் கட்டி ஓட்டம், சீருடை அணிதல் உள்ளிட்ட பல போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடம் பெறும் பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதோடு நிகழ்வில் பங்கேற்கும் அனைத்து பிள்ளைகளுக்கும் பெறுமதியான பரிசு, வெற்றிக் கிண்ணம், சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதோடு பதக்கங்களும் அணிவிக்கப்படவுள்ளன.

## மகளிர் U19 கிரிக்கெட் ;

# முதன் முறையாக இந்திய மகளிர் அணி சம்பியன்

இந்திய மகளிர் U19 கிரிக்கெட் அணி பங்களாதேஷை வீழ்த்தி முதல் முறையாக மகளிர் U19 ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. இறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்கொண்ட இந்திய அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.




இந்திப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது. இந்தியா சார்பில் கோங்கடி திரிஷா அபாரமாக வியையாடி 52 ஓட்டங்களை விளாசினார். இவர் தவிர மற்ற வீராங்கனைகள் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இடையில் கெப்டன் நிகி பிரசாத், மிதிலா வினோத் மற்றும் ஆயுஷி சுக்ளா மட்டும் இரட்டை இலக்க ஓட்டங்களை எடுத்தனர். இவர்கள் முறையே 12, 17 மற்றும் 10 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். பங்களாதேஷ் சார்பில் சிறப்பாகப் பந்துவீசிய ஃபர்ஜானா எஸ்மின் 4 விக்கெட்டுகளையும், நிஷிதா 2 விக்கெட்டுகளையும், ஹபிபா இஸ்லாம் 1 விக்கெட் வீழ்த்தினர்.

எளிய இலக்கை துரத்திய பங்களாதேஷ் அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அந்த அணியின் ஆரம்ப வீராங்கனைகளில் ஒருவரான மொசாமத் எவா ஓட்டம் எடுக்காமல் ஆட்டமிழந்தார் . இவருடன் களமிறங்கிய ஃபஹோமிதா சோயா 18, அடுத்து வந்த சௌமியா அக்தெர் 8 ஆட்டமிழந்தனர்

அடுத்து வந்தவர்களில் ஜ°ரியா ஃ பெர்டோஸ் மட்டும் 22 ஓட்டங்களை அடிக்க மற்ற வீராங்கனைகள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறினர். இறுதியில் பங்களாதேஷ் அணி 18.3 ஓவர்களில் 76 ஓட்டங்களை மட்டுமே எடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்தனர். இதன் மூலம் இந்திய அணி 41 ஓட்டங்களில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தியா சார்பில் சிறப்பாக பந்துவீசிய ஆயுஷி சுக்ளா 3 விக்கெட்டுகளையும், பருனிகா சிசோடியா மற்றும் சோனம் யாதவ் தலா 2 விக்கெட்டுகளையும், ஜோஷிதா 1 விக்கெட் வீழ்த்தினர்.







இலங்கை ரக்பி சங்கத்தினால் நடத்தப்படும் கழகங்களுக்கிடையிலான முதலாவது பிரிவு லீக் ரக்பி போட்டியின் இரண்டாவது வாரம் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.முதல் போட்டியான பொலிஸ் மற்றும் சி.எச். ரூ எஃப்.சி. விளையாட்டுக் கழகத்துக்கிடையில் நடைபெற்ற போட்டியில் சி.எச். ரூ எஃப்.சி. வெற்றி பெற்றது.

# வெல்லாவல நீக்கம்; காரணம் கூறுகிறார் சரித்



நியூசிலாந்து ஆடுகளங்களில் விளையாடும் போது மேலதிக வேகப்பந்து வீச்சாளர் ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால், துனித் வெல்லாவை அணியில் இருந்து நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று இலங்கை கெப்டன் சரித் அசலங்க தெரிவித்துள்ளார்.

தலா மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் வ20 தொடரில் விளையாடுவதற்காக இலங்கை கிரிக்கெட் அணி வெள்ளிக்கிழமை (20) நியூசிலாந்துக்கு புறப்பட்டுச் சென்றது.

நியூசிலாந்து செல்வதற்கு முன்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே கெப்டன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த கெப்டன் சரித் அசலங்க, “வீரர்கள் நல்ல உற்சாகத்தில் உள்ளனர். வு-10 போட்டியில் விளையாடி ஓட்டங்கள்- விக்கெட்டுகளை சிறப்பாகப் பெற்றுள்ளனர். இது அணிக்கு பெரும் உத்வேகத்தைக் கொடுக்கும்.

சவாலான போட்டி தான். தங்கள் நாட்டில் நியூசிலாந்து மிகவும் வலுவாக உள்ளது. அணியில் பெரிய மாற்றங்கள் எதுவும் செய்யவில்லை. ஆனால் அனுபவம் வாய்ந்த வீரர்களின் அனுபவத்தைப் புதுமுகங்களுக்கு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. நியூசிலாந்தில் விளையாடும் போது, மேலதிக வேகப்பந்து வீச்சாளர் ஒருவருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதால் துனித் அணியிலிருந்து நீக்கப்பட்டார். இது மிகவும் கடினமான முடிவு. இது எனக்கும், தேர்வுக் குழுவுக்கும், பயிற்சியாளருக்கும் கடினமானதாக இருந்தது. நியூசிலாந்து போன்ற ஆடுகளங்களில் விளையாடும்போது சில சமயங்களில் இந்த முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும்.

இரு நாடுகளுக்கு இடையே தலா 3 போட்டிகள் கொண்ட டி20 மற்றும் ஒருநாள் தொடர் முதலில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் 2025 ஜனவரி 28, 30 மற்றும் 2 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளன.

# புதிய ஸ்டையில் விராட் கோலி

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கோலி தனது சிகையலங்காரத்தை மாற்றியுள்ளார். இது தொடர்பாக இன்ஸ்டாகிராமில் ஒரு படத்தை வெளியிட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. இதனையொட்டி கடந்த 3 வாரங்களுக்கு மேலாக இந்திய அணி வீரர்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகிறார்கள். இதுவரை 3 டெஸ்ட்



போட்டிகள் முடிந்துள்ளன.

நான்காவது டெஸ்ட் போட்டி 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் நீண்ட நாட்களாக அவுஸ்திரேலியாவில் தங்கியுள்ள விராட் கோலி தனது சிகையலங்காரத்தை மாற்றி உள்ளார். அவர் பிரபல சிகையலங்கார நிபுணர் ஜோர்டான் டபக்மேன் என்பவரிடம் தனது ஸ்டைலை சற்று மாற்றியுள்ளார்.




## தேசிய ஒலிம்பிக் குழு;

# மெக்ஸ்வெல் டி சிலவாவுக்கெதிரான வழக்கு ஒத்திவைப்பு

தேசிய ஒலிம்பிக் குழுவின் பொதுச் செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா அப்பதவியில் நீடிப்பதைத் தடுக்கும் வகையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையை ஜனவரி 15 ஆம் திகதி வரை ஒத்திவைக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அன்றைய தினம் எதிர் மனுதாரர்கள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தேசிய ஒலிம்பிக் குழுவின் தற்போதைய பொதுச் செயலாளருக்கு எதிராக ஒழுக்காற்று குழு பல பரிந்துரைகளை செய்துள்ள போதும் அவர் அப்பதவியில் நீடிப்பது நெறிமுறையை மீறும் செயலாகும்.

ஆதலால், அதைத் தடுக்கும் நோக்கில் தேசிய விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகள் இருவரினால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கிடையில் தேசிய ஒலிம்பிக் குழுத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோருக்கிடையிலான மோதல் வலுத்துள்ளது.அத்தோடு பொதுச் செயலாளர் மீது இரண்டு அவ தூறு வழக்குகள் தலைவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நெருக்கடி தொடர்பில் கவனம் செலுத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே,

தேசிய ஒலிம்பிக் குழுவின் செயற்குழு உறுப்பினர்களை விளையாட்டுத்துறை அமைச்சுக்கு அழைத்து விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இரு தரப்பினருக்கும் எதிராகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்த விளையாட்டுத்துறை அமைச்சர், பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை சர்வதேச ஒலிம்பிக் குழுவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு இரு தரப்பினருக்கும் அறிவுறுத்தினார்.

அத்துடன், இந்தப் பிரச்சினையின் அடிப்படையில் நாட்டின் விளையாட்டு வீரர்களுக்கு அநீதி ஏற்படாமல் இருப்பதற்கு ஒலிம்பிக் குழு உறுதி செய்ய வேண்டும் என்றும் அமைச்சர் குழுத் தலைவர்களுக்கு அறிவுறுத்தினார்.

தேசிய ஒலிம்பிக் குழுவின் அடுத்த தேர்தல் (2025-28) டிசம்பர் இறுதிக்குள் நடத்த வேண்டும் என்றாலும், தற்போதுள்ள குழுவின் நெருக்கடியான சூழ்நிலை அடிப்படையில், அதை மார்ச் மாதத்தில் நடத்துவதற்கான முன்மொழிவுக்குக் கடந்த செயற்குழு கூட்டத்தில் தலைவரின் எதிர்ப்புக்கு மத்தியில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.



# இந்திய ஜோடி தோல்வி

ஐ.டி.எப்., டென்னிஸ் இரட்டையரில் இந்தியாவின் ரியா பாட்யா, ஜீல் தேசாய் ஜோடி இரண்டாவது இடத்தை பிடித்துள்ளனர்.

இந்தியாவில் (மும்பை) பெண்களுக்கான ஐ.டி.எப்., டென்னிஸ் தொடர் நடைபெறுகிறது. இரட்டையர் பிரிவு இறுதி போட்டியில் இந்தியாவின் ரியா பாட்யா, ஜீல் தேசாய் ஜோடி, ஜப்பானின் சடோ, மோரிசகி ஜோடியை எதிர்கொண்டது. முதல் செட்டை இந்திய ஜோடி 6-4 என கைப்பற்றியது. இரண்டாவது செட்டை 3-6 என தவறவிட்டது. வெற்றியாளரை முடிவு செய்ய நடந்த “சூப்பர் டை பிரேக்கரை“ இந்திய ஜோடி 7-10 என நழுவவிட்டது.

ஒரு மணி நேரம், 43 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில், இந்திய ஜோடி 6-4, 3-6, 7-10 என்ற கணக்கில் தோல்வியடைந்து, கோப்பை இழந்து, இரண்டாவது இடத்தை பெற்றுக் கொண்டனர்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 23ஆம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.